www.tamilarangam.net

# அரசியற் பொருளாதாரமும் 13ம் சட்ட சீர்திருத்தமும்

ரவி சுந்தரலிங்கம், **Academic Secretary, ASATiC**

> "உள்ளவை எல்லாம் அடிப்படையில் ஒன்றேதான். அது அமைதியானது, நிம்மதியானது, சமாதானம் தேடுவது. அது ஒருபோதும் இதாக அல்லது அதாக உருவாகி விட வேண்டும் என்ற நாட்டமே இல்லாதது. குருடாக தன்நிலை-மனேவியலை மையமாகவும் கொண்ட அறிவின்மையே, அந்த ஒரே விடயம் மட்டுமே, அவற்றிடையே நடப்பவை, அவற்றினை ஆழும் விதிகள், அவற்றிடையேயான வேற்றுமைகள் என்பவற்றை உண்மையாகப் புரிந்திடுவதற்கு தடையாக இருப்பது."
>
> ஆஸ்வகோஷா **(Tibetan book of the dead)**


## கட்டுரைச் சுருக்கம்

இலங்கையின் பொருளாதாரம் உள்நாட்டுப் போர்ச் சூழ்நிலையிலும் வளர்ச்சி காண்கிறது, வறுமை வீழ்சியடைந்துள்ளது என மதிப்பான உலக ஸ்தாபனங்கள் கூறுகின்றன. இக்கூற்றுகளின் பின்னடியிலுள்ள தரவுகளை ஆய்வதும் அவற்றிடையே நசிந்து கிடக்கும் மக்கள்பற்றிய தகவல்களை தேர்வதும் இங்கே எமது முதலாவது நோக்கம். இவை தரும் வழியில் இலங்கைப் பொருளாதாரத்தை அணுகி அங்குள்ள அரசியற்-பொருளாதாரங்களின் பரிணாமங்களை அடையாளம் காண விளைவது கட்டுரையின் இரண்டாவது நோக்கம். முடிவில், இலங்கையில் சிங்கள, தமிழ் பொருளாதாரங்கள் என இரு பிறம்பான அரசியற்-பொருளாதாரங்கள் உண்டெனவும், சிறீ லங்காவில் கூட நகர்புற, நாட்டுப்புற பொருளாதாரமென சிங்களப் பொருளாதாரம் பிளவு கண்டுள்ளதெனவும் வாதங்களை முன் வைப்பது மூன்றாவது நோக்கம்.


## 1. அறிமுகம்

விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையிலான போர்-போர் நிறுத்தம்-பேச்சுவார்த்தை-போர் என்ற சுற்றிச் சுழன்றுவரும் நிகழ்வுகள், இந்திய-சிறீ லங்கா ஒப்பந்தத்தின் பின்னர் இடம்பெறும் சரித்திரக் குறிப்புகள். திம்புப் பேச்சு வார்த்தை (ஆடி-ஆவணி, 1985) இந்திய அரசு இலங்கைத் தமிழரின் கரைக்கு சாய்ந்தமைக்கு அத்தாட்சி என சிங்கள அரசியல் வதிகளாலும் காலப்போக்கில் இஸ்லாமிய சமூகங்களாலும் கணிக்கப்படின், தமிழரைப் பொறுத்தவரையோ அது போராட்டத்தின் ஒருமுகத் தன்மையின் சிகரம், பல அமைப்புகளாலும் தமிழ் பேசும் சமூகங்கள் யாவரதும் சார்பிலும் பொது நிலைப்பாடுகளை முன்வைத்திடக் கூடியதாக அமைந்த ஒரே தருணம்.

இந்திய-சிறீ லங்கா ஒப்பந்தம் (ஆடி, 1987), இந்திய அரசு தான் தமிழர் பக்கம் என்று கருதுவது தவறான விடயம் என்பதை இலங்கைத் தமிழருக்கும் சிங்களவருக்கும் கற்றுத் தந்ததுடன், தனது பிராந்திய அபிலாசைகளை, பனிப்போரின் இறுதிக்கட்டத்தில், திடமான முடிவுகளில்லாது ஊர்ஜிதம் செய்ய முனைந்ததின் விளைவு. மேலும், அண்டை நாட்டின் உள்நாட்டு இனப் பிரச்சனையை தனது பாதுகாப்பு குறித்த இருதரப்பு ஒப்பந்தத்தின் பின்இணைப்புகளாலும், பிரதமர்- சிங்கள ஜனாதிபதி இடையேயான கடிதத் தொடர்புகளாலும் தீர்த்து வைக்க முயல்வது சரிப்பட்டு வராதது என்பதற்கான எடுத்துக்காட்டு. 13ம் சட்ட சீர்திருத்தமோ இந்தியாவின் இனப்பிரச்சனை நோக்கிய முயற்சிகள் தமிழரது கோரிக்கைகளுக்கு உதவிடக்கூடாது என்பதை உத்தரவாதம் செய்வதற்காக சிங்களத் தலைவர்களால் ஒப்பந்தத்தின் முன்னரே எழுதிக் கைவசம் கொண்டிருந்த திட்டம். இந்திய மாநிலங்களிலும் பார்க்க மிகக் குறைந்த அதிகாரங்கள் கொண்ட அதிகாரப் பரவலாக்கமாயினும் சிறீ லங்காவின் அரசியலில் புதிய திருப்பத்தை தரக் கூடிய அரசியற் சாசனப் பிரவேசம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருபது ஆண்டுகளின் பின்னர் 13ம் சீர்திருத்தம் பற்றி நாம் மீண்டும் பேசுகிறோம் என்றால் அது இலங்கையில் ஏதோவிதத்தில் இனப்பிரச்சனையின் தீர்வு என்றவாறு இந்தியா ஈடுபட்டுள்ளது என்பதற்கான அறிகுறி. இன்று பின்நோக்கிய அறிவுடன் சரித்திரம் பேசுபவர்களும் அன்று முன்னோக்கிப் பார்க்கும் ஆற்றல் கொண்டவர்களும் இணக்கம் காணும் விடயம்: இந்திய இராணுவம் இருந்தபோதே அதன் நடைமுறைச் சாத்தியத்தை முயற்சிக்காது போனது என்பதாகும்; ‘கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாது போய்விட்ட தீர்வுக்கான தருணம், தமிழ் மக்களுக்கோ இழந்துபோய்விட்ட அரிய வாய்ப்பு’ என்பதே அவ் இணக்கத்தின் அடிப்பொருளாகும். 13ம் சீர் திருத்தம் முற்றாக ஒப்பந்தத்தையும் இந்தியாவின் இனப்பிரச்சனைக்கான தீர்வினையும் பிரதிபலிக்காது போயினும் சரித்திர ரீதியில் ஒன்றிணைந்ததாகப் பார்ப்பது இயற்கையே. ஆகவே, இந்தியாவின் தலையீடு இல்லாது அதனது உண்மையான நடைமுறைச் சாத்தியம்பற்றி பேசுவதும் பொய்யான வாதமே. இந்தியா எவ்வளவு தூரம் அதன் நிர்வாக நடைமுறையை ஊர்ஜிதம் செய்திட தன்னை முன்வைக்கும்? அதன் தலையீடு தகுந்ததா, தவிரக்க முடியுமா? இந்தியாவின் தலையீட்டுக்கான உள்ளார்த்தம் என்ன? என்றெல்லாம் கேள்விகளுடன் நாம் தங்கிவிடுவது இயல்பு.

எந்தவொரு விடயம் பற்றியும் நாம் கருத்துக் கூறுமுன்னர் அதனை எவ்வகையான கருவியால் ஆராய்ந்து அவற்றின் தரவுகளை எத்தகைய கோட்பாடுகளுள் உள்ளடக்கித் தருகிறோம் என்பதை முற்கூறிட வேண்டியது எமது கடமை. நாம் மிதவாத (Liberal) அல்லது வர்க்க (Class based) அல்லது பல்பரிமாண (Pluralist) ஆய்வுகளுள் ஒன்றில் திடமாக இருந்து எமது கருத்துக்களைச் சொல்கிறோமா? அல்லது அன்றாட பார்வைகளுக்கு ஏற்றவாறு எல்லாத் தொகுதியிலிருந்தும் பெற்றுக் கொண்டவை ஏதாவதைக் கூறி எம்மையும் மற்றவர்களையும் குழப்பத்தில் உள்ளாகிறோமா? என்ற கேள்விகள் எம்மை நலிய வைத்துவிடும். இவ்வகையில் நாம் 13ம் சட்ட சீர்திருத்தம் என்பதை அணுகுமுன் அரசியற்-பொருளாதாரம், அரசு, அரசாங்கம் என்பவைபற்றிய எமது நிலைப்பாடுகளைத் தெரிவிப்பது எம் கடமை ஆகிறது.

**எமது நிலைப்பாடு**

13ம் சீர்திருத்தம் என்ற விடயத்தை மட்டுமே மையமாகவும் எல்லையாகவும் கொண்டு கருத்துக் கூறுவதாயின் எமது பதில் இலகுவானது. அது இலங்கையின் இனப்பிரச்சனையை தீரக்க வக்கற்ற ஒரு சாசன அமைப்பு, அவ்வளவுதான். இதனால் உருவாக்கப்பட்ட சிங்கள மாகாண அரசுகளினால் மக்கள் ஏதாவது பயன்பட்டுள்ளனரா என்றால், இருபது வருடங்களின் பரீட்ச்சையின் பின்னர் ‘இப்படி அல்லது அப்படி நிலைமைகள் மாறினால்தான் பயன்களை காண முடியும்’ என்ற முனகல்களே அங்கெல்லாம் எதிரொலிக்கின்றன.

கையில் கிட்டியதை வைத்து பலம் பொருந்தியவனது அட்டகாசத்துக்கு எதிராக என்ன செய்யலாம் என்பது தனது பலத்தையும் பலவீனத்தையும் எடைபோட்டவனது சிந்தனைப் போக்கு. கையில் கிட்டியதுதான் எமது வக்கு எனத் தோல்வி மனப்பாங்குடன் மக்கள்பற்றி சடுதியாகக் கரிசனம் கொண்டாதும் இன்னொரு போக்கு. கைக்கு எட்டுகிறதோ இல்லையோ இதுதான்-இதேதான் அந்த ஒரேஒரு தீர்வு என காலத்துள் உறைந்தவர் போல சிந்திக்க மறுப்பவர் கொள்வது மற்றப் போக்கு.

எம்மைப் பொறுத்தவரை 13ம் திருத்தம் அதனைத் தருமா இதனைத் தருமா என அரசமைப்பு ரீதியில் கருத்துகள் சொல்வதை பித்தத் தனம் என்கிறோம். ஏனெனில், அரசு என்றால் என்ன? என்ற அடிப்படையான கேள்வியிலிருந்தே நாம் அவ்விடயத்தை அணுக விளைகிறோம். சிறீ லங்காவின் அரச அமைப்பு சிங்கள-சோவனிச குட்டி-முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு வடிவம் தருவது என்பதில் அசையா முடிவு கொண்டுள்ளபோது வெறும் அரச சாசன சீர் திருத்தங்களால் இனப்பிரச்சனைக்குத் தீர்வோ, உழைக்கும் மக்களது அபிலாசைகளுக்கான சுபீட்சத்தையோ தர முடியாது என்பதில் விளக்கமாகவே உள்ளோம். மேலும், புரட்சிகள் பிதட்டல்கள் வேண்டாம் என்று அறிவிலா அநுபவத்தில் கூறுபவர் கூட அரச நிர்வாகப் பரவலாக்கத்திற்கும் (decentralisation) அரசியற் பரவலாக்கத்திற்கும் (devolution) பாரிய வேற்றுமைகள் உண்டு என ஏற்றுக் கொள்வர். எனவே அவர்களது நிலைப்பாடுகளில் இருந்து வெறும் நிர்வாகப் பரவலாக்கத்தை ஓகோ எனக் கூப்பாடு போட்டு எம்மைக் குழப்பிடப் போவதும் இல்லை. எனவே, எமது கருத்துகள் மக்களது-பயன் என்பவைபற்றிய கணிப்பீடுகளிலும் அவர்களது அடிப்படையான அபிலாசைகளிலும் அவை தங்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடமைகளிலேயுமே தங்கி இருக்கும். ஆகவே, எமது முடிவுகள் அவைக்கேற்ப கேந்திர- தந்திரோபாய நிலைப்பாடுகளில் அமைய வேண்டும் என்கிறோம். 13ம் திருத்ததிற்கு ஆதரவா? என்ற கேள்வி மிக அடாவடித் தனமானதாகவே இருக்கிறது என்ற போதிலும், இதற்கு மக்கள்பற்றிய சிந்தனைகளின் உள்ளார்த்தம் ஏதாவது உண்டா என்பதே எமது ஏக்கமாக உள்ளது.
ஈழம் என்பது மக்களைக் கொண்டு வரையறுப்பு செய்யப்பட்டு, உடமைகள் அவைபற்றிய உரிமைகள் என்பவற்றிக்கு இடையே உள்ள ஜீவித உறவுகளுக்கு எதிரான அடக்கு-ஒடுக்கு முறைகள் என்பவற்றுடன் ஈழ-மக்களது பிரதான வர்க்கங்கள் பேரில் கணிக்கப்பட்டு கோரிக்கையானது. ஆனமையால், மக்களது இணைப்புகள் இல்லாத அல்லது சிதைந்து போகும் தருணங்களில் கையில் கிடைக்கும் கருவிகள் எதனையுமே முற்றாக முடியும்வரை பாவித்திடுவது சரியானதே என்பது எமது கணிப்பு. கிழக்கில் இஸ்லாமியர்-தமிழர் என தமிழ் பேசும் சமூகங்களிடையே வேறுபாடுகள் உருவாகி அவை பகை-முரண்பாடுகளாக பரிணமித்திடுமா என்ற எமது ஏக்கங்களிடையே அச்சமூகங்களிடையே சரித்திரப் பொறுப்புகளை சுமத்திடும் எந்த சம்பவங்களையும் வரவேற்பதற்கு நாம் தயங்குவதில்லை. ஆகையினால், நாம் 13வது சரத்துள் சரணமடைந்து விட்டோம், அதுவே தீர்வுக்கான முதற்படி என ஏற்றுவிட்டோம் என்பது தவறானது. எனவே எம்மைப் பொறுத்தவரை 13வது சீர்திருத்தம் ஒரு சம்பவமேயன்றி சரித்திர வரையறுப்பல்ல.

## 2. அரசு

அரசு (state) என்பதற்கும் அரசாங்கம் (government) என்பதற்கும் பாரிய இடைவெளி உண்டு என்பதை நாம் யாவரும் அறிவோம். பிருத்தானியா என்ற அரசை தொழிற் கட்சியோ (Labour Party) தொன்மைவாதக் கட்சியோ (Conservative Party) மாறுபட்ட கொள்கையின் பிரகாரம் மக்கள் வாக்குகளுடன் கைப்பற்றி அரசாங்கமாக ஆட்சி செய்யவதை ஜனநாயக முறை என்று கற்றுக் கொண்டுள்ளோம். இவ்வாறு அரசு என்ற அமைப்புக்கும் அரசாங்கம் என்ற நிர்வாகத்திற்கும் அமைப்பு ரீதியில் வேறுபாடுகள் உள்ளன என்பதையும் நாம் அறிவோம். ஆயினும், அரசு எனும் அமைப்புக்கு எதிராக இவ்விரு அரசியற் கட்சிகளும் இயங்குவதில்லை. கட்சிகள் எவையாகினும் அரசு எந்த வர்க்கங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் யாருடைய சார்பில், தயவில், தவிர்க்க முடியாத அழுத்தங்களிடையே அரசாளுகின்றார்கள்? என்று கேட்டால் பதில் மத்திய, மேல்மட்ட வர்க்கங்களது முதளாளித்துவத்தை நிலைநாட்டவே காரியம் செய்கிறார்கள் என்பதை உணர்வோம். அதன் பிரகாரம் பிருத்தானிய அரசின் தன்மையையும் புரிந்து கொள்வோம்.
அரசு என்பதை எவ்வாறு அணுகுது என்பதில் பல கருத்துகள் உண்டு. இவற்றினை (1) அமைப்பு ரீதியான (organisational) (2) இயங்கியல் ரீதியான (functional) இரண்டு வகுப்புகளாகப் பாகுபடுத்தலாம்.

**அமைப்பு ரீதியான வரைவு**
அரசை அமைப்பு ரீதியல் வரையறுப்பு செய்பவர்கள் அதனை மக்களது சமூக-கலாச்சார ஸ்தாபனங்களுள் சுதந்திரமான ஒன்றாகக் கருதுகின்றார்கள். அதாவது இன, வர்க்க, மதம் என்பவைபோன்ற சமூகக் கட்டுகளைப்போலவே அரசு என்பதும் புதிய நாகரீகத்திக்கு ஏற்ப இன்னுமொரு சமூக அமைப்பாக பரிணமிக்கின்றது. இவ்வாறு அமையும் அரசு மற்றைய சமூக அமைப்புகளிலிருந்து சுதந்திரமானதாக இருப்பதால் மக்களுக்கான நன்மைகளை செய்யக்கூடியது என்பதுமட்டுமல்ல அதற்கான அதிகாரத்தையும் மக்களிடமிருந்தே பெற்றுக் கொண்டுள்ளது. மக்களும் சமூகங்களும் தமது தனிப்பட்ட சமூகப் பொறுப்புகளையும், சில தனிமனித சுதந்திரங்களையும் அரசுகளிடம் தாரைவார்த்துக் கொடுப்பது போல கையளித்து இருப்பார்கள். “அரசு என்பதற்கே எமது நலன் சார்பில் என்ன செய்ய வேண்டும் என்ற முழுமையான அறிவும் மக்களை மிஞ்சிய ஆற்றலும் உண்டு.” என்ற உணர்வையும் மக்கள் தம்மகத்தே வளர்த்து வைத்திருப்பர். ஆகவே, தனது செலவுகளுக்கு மக்களது உழைப்பிலும், பாதுகாப்பிற்கு அவர்களது வியர்வையிலும் உயிரிலும் தங்கியிருப்பதையும் அவற்றை எதிர்பார்ப்பதும் நியாயமே என்பது விளக்கம்.

இவ்வாறு சடப் பொருளாக நற்கருமம் புரியும் ஒரு கருவியாகவும், மறுகரையில் உயிர்கொண்ட ஊடகமாக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பாகவும் ·



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பது அரசு என்பது இவர்களது வாதம். அதாவது, கடவுள்போல மக்களிடையே இடம்பெறும் இன்னுமொரு ஸ்தாபனமாக அரசு இடம்பெறுகிறது.
ஆகவே தமது கட்சிப் பலத்துடன் (1) அரசாங்கமாவதும் (2) அரசைக் கைப்பற்றுவதும் (3) அரசை தம் இஸ்டத்துக்கு அல்லது கருத்திற்கு நெருங்க வைப்பதும், இவை மாறுபட்ட வழிமுறைகளாக இருந்த போதிலும், இறுதியில் ஒரே முடிவைத்தரும் அவசிய கருமங்கள் ஆகின்றன.

அதாவது, நல்ல கருமங்களை நடைமுறையாக்கிட வேண்டின் அரசு என்பதை ஏதாவது வகையில் தமது கையுள் கொண்டு வர வேண்டும் என்பது நடைமுறை நியதி ஆகின்றது.

**இயங்கியல் ரீதியான வரைவு**
அரசு அமைப்பை இயங்கியல் ரீதியில் அணுகுபவர்களோ அதனை சமூகங்களது அங்கமாகவும் அச்சமூகங்களை ஆளும் சமூகப் பெறுமதிகளின் (social values, ethics) பிரதிபலிப்பாகவும் கணிக்கிறார்கள். அங்கம் எனும்போது, அரசு என்பது மக்கள் கூட்டத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டது என்பதையும் அரசு அவர்களிடையே உள்ள பிரதானமான வர்க்கத்தினது பலமான கருவி என்று இவர்கள் கருதுகின்றனர். மேலும், அங்கே மக்களது ஜனநாயக உடமைகள் என்ன? அவற்றினை நுகர்வதற்கான நிஜமான சுவாத்தியம் உண்டா? சமூகத்தில் பொருள் பண்டச் சேகரிப்பு என்பதற்கும் உழைப்புக்கும் சமாந்தரமான ஜீவித உறவு இருக்கிறதா? போன்ற கேள்விகள் அந்த சமூகப் பெறுமதிகளின் குறிகாட்டிகள் என்பது இவர்களது கோட்பாடு.
எனவே, அரசு என்பதை மக்களது ஸ்தாபனங்களுள் அமைந்த ஒன்று. அவற்றுள் அது அதிக பலம் கொண்டதாக இருக்கின்ற போதிலும் அது மக்களது ஸ்தாபனமாக இருப்பதால் அதனை மாற்றி அமைப்பதோ இல்லாமல் மாற்றீடு செய்வதோ மக்களுக்கு உரித்தான இயலுமான காரியமாகியது.
ஆகவே, அமைப்பு ரீதியில் (organisational) அணுகுபவர்களுக்கு அரசு என்பது மக்களது தேடலின் முடிவாக அமைய, இயங்கியல் ரீதியில் அணுகுபவர்களுக்கோ (functional) அது மக்களது திட்டவட்டமான தேடலின் தொடக்கங்களில் ஒரு முனைப்பாகவே மட்டுமே அமைகிறது.

எனவே அரசு என்பதுபற்றிய எமது கேள்விகள் பின்வருமாறு அமைகின்றன.

(1) நாம் கருத்தில் எடுத்துக் கொண்டுள்ள அரசு அங்கு வாழும் மக்களுக்கு ஏற்றதா? அதாவது, அவர்களது சமூக-பொருளாதார அபிலாசைகளை பிரதிநிதித்துவம் செய்கிறதா?
(2) அதற்கு உகந்த சமூக-அரசியல்-பொருளாதார அமைப்புகளை உள்ளடக்கி இருக்கிறதா?
(3) இவற்றின் அடிப்படையிலான அரசியல் கலாச்சாரத்தை பேணிப் பராமரித்து வளர்கின்றதா?

**எமது நிலைப்பாடு**
எம்மைப் பொறுத்தவரை அரசு என்பதை மக்களுக்கு பிறம்பான அதேவேளை மக்களுக்காகக் கடமையாற்றும் ஒரு ஸ்தாபனம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இவ்வாறான நிலைப்பாடு, மேற்கத்திய ஜனநாயக வழிகளால் கண்ட அநுபவ ரீதியில் நாகரீக வளர்ச்சி என்ற விளக்கத்துள் அடக்கப்பட்டு தொடர்பு படுத்தப்படாத வாதங்களுடன் முன்வைக்கப்படுகின்றன என்பதையும், இவற்றுள் புதைந்துகிடக்கும் விவாதங்களும் நியாயப்படுத்தல்களும் 'நல்ல' நோக்குடனேயே உள்ளன என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆயினும், அரசியற்-பொருளாதாரம், வர்க்கங்களின் முனைப்புகளும்-முரண்பாடுகளும் என்றவாறு அமையும் சிந்தனா தத்துவார்த்தங்களில் பூரண நம்பிக்கை கொண்டவராக இருப்பதனால் நாம் இவ்வாறான மக்கள் அடியில்லா வரைவுகளை நிராகரிப்பதே தர்க்கீகமாகிறது.

சமூக-பொருளாதார அபிலாசைகளும் சமூக-அரசியல் கட்டுகளும் ஒன்றுடன் ஒன்று தமது வளர்ச்சியிலும் இருப்பிலும் பின்னிப் பிணைந்து காணப்படுவன. அதாவது ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துப் பார்ப்பது மிகவும் கஸ்டமான சர்ச்சைக்குரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காரியம். அதேவேளை, அரசியல்-கலாச்சாரம் அல்லது மேற்கத்திய பாணியில் அரசியல் நாகரீகம் என்று கூறப்படும் இயங்கியற் தன்மை இவை இரண்டினையும் சுற்றி இருக்கும் சுவாச வாய்வு. ஆகவே இந்நிலைப்பாடுகளில், அவைக்கு உகந்த கோட்பாட்டுகளின் சூழலில் இருந்தே பல சமூங்களாக வாழும் இலங்கைத் தீவினைப்பற்றிய ஆய்வினையும் எமது கருத்துக்களையும் கூற முடியும்.

### 3. பொருளாதாரம் மக்களது

இலங்கையின் பொருளாதாரம் 6.5 % வளர்ச்சி காண்கிறது என்றும் 'வறுமை' கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகவும் குறைந்துள்ளது என்று அறிக்கைகள் கூறுவதைத் தெரிந்து கொண்டும் இலங்கையை புரைந்துபோன நாடு (failed state) என்று பல ஆய்வுக் கட்டுரைகளில் கூறி உள்ளோமே அது எவ்வாறு முடியும் என வினாவுவது முறையானதே.

ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank) தனது மாசி 2008 அரசியல் பொருளாதார அறிக்கையில் "இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இருக்கும் போதிலும் 6.5 % வளர்ச்சியைக் கண்டுள்ளது. இதற்கான காரணங்கள் 1. இந்தப் போர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குளே உள்ளடக்கப்பட்டுள்ளது,......" என்றவாறு ஆரம்பிக்கும்போது இவ்வாறான அறிக்கைகள் எவ்வாறான கருத்தை மக்கள் உடமைகள் உரிமைகள் என முன் நிறுத்துகின்றன என்பதை ஓரளவு புரிந்து கொள்ளலாம். நாடு என்றும் பொருளாதாரம் என்றும் மக்களுக்கு அப்பாற்பட்ட ஏதாவது சடப் பொருள் உண்டா? அவை இயங்கியற் சாத்தியமா? பொருளாதாரம் என்பது சகல மக்களையுமா அல்லது குறிப்பிட்ட ஒருசாராரையா குறிக்கும்? இவ்வாறு மக்களுக்கு அப்பாற்பட்ட வெறும் தரவுகளை அறிக்கைகளாக, தாஸ்தாவேதுகளாகக் கருதுவோமாகின் அவ்வாறான தேர்ச்சியை முதளாளித்துவத்தின் அணுகுண்டென வர்ணிக்கப்படும் neutron bomb உடன் ஒப்பிடுவதில் தப்பில்லை. அக் குண்டு உயிர்களை முற்றாக கொன்றொழிக்கும் போதிலும், கட்டிடங்கள் சடப் பொருட்களை அழிக்கமாட்டாது என்பதையும் நாம் அறிவோம். தென் ஆசியாவின் ஒரேஒரு இலக்கிய (literature) நோபல் விருதைப் பெற்ற ரவீந்திரநாத் தாகூர் பற்றிய துணுக்கு இங்கு மேல் உவமானமாக உதவும். தனது திறமையான ஓவியத்திற்கு தாகூரின் அநுசணையையும் பெற்றிட வேண்டும் என்ற அவாவில் அவருக்குத் தொல்லை கொடுப்பாராம் பிரபல்யமான ஓவியர் ஒருவர். ஓவியரது கைத் திறமையையும், சிந்தனைப் போக்கினையும் தெரிந்திருந்த தாகூர் இறுதியில் சந்திப்புக்கு இணங்கினாராம். ஓவியரும் மிக்க அவாவுடனும் மிடுக்குடனும் தனது படைப்பை தாகூர் முன் வைத்து அவரது கருத்தை நிர்ப்பந்தித்தாராம். சில கணங்களின் பின்னர் தாகூர், "நண்பரே, உமது ஓவியம் பற்றிக் கருத்துச் சொல்லும் தகமையோ எனக்கு இல்லை" என்றாராம். ஆத்திரமடைந்த ஓவியரோ காரணம் வினவினாராம், அதற்கு, "இது பார்வைக்கு அழகாக இருப்பினும் இதனிடையே மக்கள் வாடையோ பிரமையோ இல்லாமல் இருப்பதால் எனக்கு இவ்வோவியம் பற்றிய கருத்துச் சொல்ல முடியாதுள்ளது என்றேன்" எனக் கூறி அகன்றாராம் தாகூர்.

மக்கள் மீது ஆரோக்கியமான எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் கொண்டவன், அவர்களது சரித்திர ஓட்டத்தின் போக்கினை ஊன்றி அவதானிப்பவன், அவர்கள் மீது தன் கரிசனத்தையும் அவற்றினால் ஊறிப்படிந்த அன்பையும் ஒருபோதும் இழக்கமாட்டான். போர், போராட்டம், நாடு, தேசம், பொருளாதாரம், ஏன் கடவுள் என்றெல்லாம் மனிதர்கள் இடையே ஆங்காங்கு அங்கலாய்ப்புகளும், அதிதீவிர அவாக்களும் இடம் பெறும் போதெல்லாம் அங்கெல்லாம் மக்களது இருப்பு எங்கே, அவர்களது அபிலாசைகளின் உறைவிடம் எங்கே என்றே அவன் வினவுவான், ஏக்கம் கொள்வான். மக்கள், மக்கள் என்று கூறும்போது தனது உறவினர்களையும், தெரிந்தவர்களையுமின்றி தனது இருதய உறவுகளுக்கு வெளியே வாழுகின்ற மனிதக் கூட்டங்கள்பாலே சிரத்தை கொண்டவன் என்பதை உணர்ந்திருப்பான். ஆயினும், அவர்களே பூரணமாக சித்த ரீதியில் சித்தாந்த விளக்கங்களுடன் ஏற்றுக் கொண்ட பாரிய உறவினர் கூட்டம் என்பதை தன் இரத்த ஓட்டத்துள்ளேயே ஏற்றுக் கொண்டிருப்பான். தான் உணர்வு பூர்வாமாக அறிவு ரீதியில் தேர்ந்து கொண்ட மக்கள்

www.tamilarangam.net

கூட்டம் பல சமூகங்களின் கூட்டு என்பதையும் அதுவே மொத்த மக்களது முன்னேற்றத்தின் முன்போகும் படிக்கட்டு என்பதை தர்க்கீக ரீதியில் புரிந்து கொண்டிருப்பான். எனவே, அவர்களது வாழ்விலும்-சாவிலும், உயர்விலும்-தாழ்விலும் தானும் பயணம் செய்வான், மானசீகமாக உணர்வுகள் கொள்வான், அவ் அலை ஓட்டத்திலேயே உயிர் கொள்வான். ஆகவே, ஒரு நாட்டின் பொருளாதாரம் என்பது எவற்றை, யாரைக், குறித்து நிற்கிறது என்ற கேள்வியே எமக்கு அத்தியா அவசியமாகிறது என்பான்.

வெள்ளையரது இனத்துவேச (Apatheite) அரசாக தென் ஆபிரிக்காவோ றொடீசியாவோ ஒரு காலத்தில், உலக நாடுகளின் பொருளாதாரத் தடைகள் இல்லாத நிலையில், மிகவும் ஆரோக்கியமான பொருளாதாரங்கள் என வங்கிகளது ஸ்தாபனங்கள் எடை போட்டதையும் நாம் இங்கு நினைவு கூர வேண்டும். ஒரு நாட்டின் பெரும்பான்மையோரைக் கணக்கில் கொள்ளாத பொருளாதாரக் குறிகாட்டிகள் எதனை வெற்றியாகவும் தோல்வியாகவும் கணிக்கின்றன என்பது விசனமான விடயமே. ஆதலால், ஒரு பொருளாதாரத்தின் பெருநிலைவாரியான (macro) கணிப்புகளுடன் நுண்நிலைவாரியான (micro) கணக்குகளுடன், குறிப்பாக மக்கள் பெறுமதி அங்கே என்ன என்று கணக்குக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இங்கேதான் அந்தப் பொருளாதாரத்தில் மக்களது பங்கு எவ்வகையில் உள்ளது? எவ்வளவு மூலதன-தொழில்வாரியான ஈடுபாட்டில் அமைந்து உள்ளது? என்ற விசாரணைகள் ஊடாக அப் பொருளாதாரதின் உண்மையான எடைபோடலையும் கொள்ள முடியும் என்பது இன்று சகலராதும் ஏற்கப்பட்டுள்ளது.

எனவேதான், மக்களா? மூலதனமா (பணமா)? என்ற முட்டையா கோழியா என்ற Catch-22 கேள்வியுடன் நாம் தடங்குவதில்லை. மக்களே மூலதனம் என்பதையும் அவர்களுள் உழைக்கும் மக்களே பிரதான சக்தி எனவும் தர்க்கீக ரீதியில் ஒவ்வொரு தடவையும் மீள்-பரிசோதனை செய்யும் போதும் நாம் ஏற்றுக் கொள்வதனால், அகப் பரிசீலனை தடங்கலாகத் தெரிவதில்லை. அதேவேளை, வர்க்கங்கள் எவை, அவற்றின் ரீதியில் மக்களது உடமைகள், அவைபற்றிய உரிமைகள் என்பவை சரித்திர ரீதியில் மீள் பரிசீலிக்கப்பட்டு மீளாக்கம் செய்யப்பட வேண்டியது சரித்திரக் கடமை என்பதையும் நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்களை முதன்மைப் படுத்துவதாயின் அவர்களது ஒட்டு மொத்தமான முன்னேற்றத்தை காத்திரமாகப் பேணக்கூடிய முன்னணி வர்க்கங்கள் எவை? என்ற அடிப்படைக் கேள்வியிலேயே எமது கருத்துக்கள் தங்கி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் எமக்கு எள்ளவிலும் நம்பிக்கையீனம் இருக்க முடியாது. இங்கே தமிழர் சிங்களவர் இஸ்லாமியர் என்ற பிரிவுகூட இருக்க முடியாது. ஆனால், படிப்படியாக பரிணாமம் சேரும்போது இச் சமூகத் தொகுதிகளிடையே உண்மையான பகை-முரண்பாடுகள் உள்ளனவா என்பதற்கான பதில்கள் தாமாகவே திரளத் தொடங்கிவிடும் என்பது தர்க்கீகத்தின் (dialectics) இயற்கையான விளைவு.

## 4. இலங்கை அரசியற்-பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சி

**பாராமரிப்புக் காலம்**

ஒரு பின்தங்கிய, சமூக ஒருங்கமைப்பு இல்லாத, மேலும் காலனித்துவத்தால் கண்டுபிடிக்கப்பட்ட, நாட்டினை யார் ஆள்கிறார்கள் என்பதிலும் பார்க்க அதனை யாரால் ஆள முடிகிறது என்று கேட்பது அந்நாட்டின் பொருளாதாரம் யாருக்காக யாருடைய தயவில் இயங்குகின்றது என்பதை இலகுவில் தெரிந்து கொள்ள ஓரளவு உதவும். இதனை ஈராக் என்று காலனித்துவ காலத்தில் (League of Nations) உருவாக்கப்பட்ட நாட்டினை, அங்கு வாழும் பிறம்பான இன மக்களை அடக்கி ஒடுக்கி, அந்தப் போலி நாட்டைக் கட்டிக்காத்த சதாம் குஷேயின் என்ற கொலைகாரச் சர்வாதிகாரிதான் ஈராக்கை ஆழுவதற்கு சரி என அவனைக் கவிழ்த்த அமரிக்கர்களே கூறுவதில் இருந்தே எமது உள்ளார்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம்.
இலங்கைத் தீவின் பொருளாதாரம் ஆங்கிலேய காலனித்துவ அதிகாரிகளிடமிருந்து அன்று அவர்களால் வளர்க்கப்பட்ட அதிகார வர்க்கத்திடம் கையளிக்கப்பட்ட பின்னரும் கூட அது தொடர்ந்தும் பிருத்தானிய பொருளாதாரத்தின் அங்கமாக அதன் ஆதிக்கத்துள் அடக்கப்பட்டதாகவே இருந்தது. ஏற்றுமதிகள் தேயிலை இறப்பர் ஆகிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும் தோட்ட உற்பத்திகளாகவும் இறக்குமதிகள் பிருத்தானியாவின் உற்பத்திகளாகவுமே இருந்தன. இவ்வாறான காலனித்துவ நிலைப்பாட்டை மாற்றிடவோ புதிய அந்நிய பொருளாதார உறவுகளை ஏற்படுத்திடவோ கையேற்ற அரசியற் தலைவர்களிடம் தலைமைத்துவமோ புலமைத்துவமோ இருக்கவில்லை. எனவே அப்படியான காலனித்துவ பொருளாதாரத்தின் பராமரிப்பை இவர்கள் போன்றவரின்றி வேறு யரும் முன்னின்று செய்ய முடியாது என்று முடிவு கொள்வதில் தவறில்லை என்பது எமது வாதம்.

ஆனால், இத் தலைமையை எதிர்த்திட கசிப்பு வடிப்பு, இரத்தினக் கல் அகழ்வு போன்ற துறைகளில் தமது மூலதனத்தைச் சம்பாதித்திட்ட புதிய சிங்கள முதலாளித்துவ, குட்டி-முதலாளித்துவ வர்க்கங்கள் வளர்ந்து கொண்டிருந்தன. இவர்களது மூலதனம் அதிகாரப்பலம் சேகரிக்க முடியாததாகவும், அரசியல் தளம் பரந்த வீச்சு இல்லாதும் இருந்தது. ஆதலால், ஊடுருவல்-சதி முயற்சிகளாலேயே தமது அபிலாசைகளை அரசியற்-பொருளாதாரமாக அரசேற்றிட முடியும் என்பது இயங்கியல் விதியாக அமைந்து போயிற்று என்பதில் கொசப்பான ஒரு விளக்கமும் உண்டு. மேலும், மேற்கத்தியோருக்கு எதிரான சுதந்திரப் போரட்டத்தில் சமூகத்தின் அடித் தட்டுகளை ஒழுங்கு செய்திட ஈடுபட்டமையால் பௌத்த மத அமைப்புகள் அரசியல் தளமாக மாறிடும் வகையிலும் இருந்தன. எனவே இப்புதிய உள்நாட்டு சிங்கள முதலாளித்துவ வர்க்கங்கள் அவற்றினைக் கைகடத்திட முனைந்ததும், ஏற்கனவே சிங்கள-பௌத்த கட்டுக் கதைகளாக வாதங்களாக இருந்த பௌத்தமத முதன்மை வாதம் இவர்களது சிங்களத் தேசியவாதத்துடன் ஒன்றறக் கலக்கப்பட்டு சிங்கள-பௌத்த சோவனிசமாக உருவாக்கப்பட வேண்டியதும் இயங்கியல் அவசியமாகிற்று.

இங்கேதான் அரசு என்பதை அமைப்பு ரீதியில் பராமரிக்க முற்பட்ட ஆங்கிலமயப்பட்ட அரசியல்வாதிகள் சமுதாயத்திலிருந்து அந்நியப் படுத்தப்படுவதற்கான சூழல் எழுந்தது. ஆக, இக்காலத்துப் பொருளாதாரம் யாரிடம் என்றால் அது நேரடியாக இல்லாவிட்டாலும் பிருத்தானியரது கைகளுள்ளேயே இருந்தது என்று கூறுவது பொருத்தமான பதில். ஆனால், அது எமது தீவில் யாருக்கு உடந்தையாக இருந்தது? சிங்களவர் தமிழர் என்ற பாகுபாடுகளில்லாது வெள்ளையரின் காலத்தில் அவர்களது நிர்வாகிகளாக பயிற்றுவிக்கப்பட்டு ஆங்கிலேயக் கலாச்சாரத்துள் வளர்க்கப்பட்ட தம்மிடையே பிசின் இல்லாத புதிய சமுதாயத்திற்கு உரித்தாகிற்று. பொருளாதாரம் என்பது பூக்கண்டுகள் போல பாராமரிக்கப்பட வேண்டிய விடயம் என்ற வகையிலேயே இவர்களது அணுகு முறை இருந்தது என வர்ணிப்பது தவறல்ல. பெரும் தோட்ட பண்ணைக் காலத்தில் உருவாக்கப்பட்ட இவர்கள் நாட்டினது விவசாயத் துறையை எவ்வாறு முன்னேற்றுவது என்பதில் அக்கறை கொண்டார்களோ என்னவோ, சிங்களத் தொகுதிகளின் அடிமட்டத்திலிருந்து எழும் காணிக்கான அபிலாசைகளை நெருக்கடிகளை அதனால் தமக்குள்ள அரசியல் நெருக்கடியை அவதானிக்காது போயிடவில்லை.

இக்காலத்தை எடைபோடுவோர், குறிப்பாக போராட்டச் சூழலில் வளர்ந்த தமிழ் அரசியல் வாதிகள் தமிழ்-முதலாளி-வர்க்கம் என்றும் அது சிங்கள் முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து தமிழருக்கும் நாட்டுக்கும் தீங்கிழைத்தவர் என்றும் கண்மூடித்தனமாக கருத்துகள் சொல்வது வழமை, ஆனால் பொருளாதாரத் தரவுகளோ வேறு. தமிழரிடையே எழுந்த அரசியல் சமூகம் முதலாளி வர்க்கமாக என்றுமே பரிணமித்தில்லை. இச்சமூகமோ, இவர்களது வம்சாவளிகளோ தமது பரம்பரை அரசியல்-மூலதனத்தில் வாழ்க்கை தேடினார்களோ இன்றி தாம் சேமித்த பணத்தை மூலதனமாக மேலாக்க எங்காவது முதலீடு செய்ததோ மக்களது உழைப்பை அதன் இலாபமாக மூலதனம் சேமித்ததும் இல்லை. இவர்கள் பொதுவில் தமது சமூக தராதரத்தைப் பேணிக் கொள்ள தாம் ஆங்கிலேய மத்திய வர்க்கங்களிடமிருந்து கற்றுக் கொண்ட காலாச்சாரப் பாணிகளை, இன்று புலம் பெயர்ந்த நாம் யாவரும் செய்வது போலவே பின்பற்றினர். வடக்கு கிழக்கின் வளர்ச்சியோ இன்றும் பின்தங்கிய நிலையில் உள்ளபோது, அங்கு அன்றொரு முதலாளி வர்க்கம் இருந்தது என்பது வர்க்க ரீதியில் அறிவு சேர்க்காத அவசரக் குடுக்கைகளின் வார்த்தைகளே. ஆனால், இவ்வரசியற் சமூகம் புதியதொரு அதிகார வர்க்கத்தை சார்ந்தது என்பதை மறுப்பதற்கில்லை. இது தமிழ்த் தொழிலாளிகளின் உழைப்புகளில் மூலதனம் தேடாது போகினும், அவர்களது எதிர்பார்ப்புகள், அபிலாசைகள், பிரச்சனைகள், சர்ச்சைகள் என்பவற்றை புரிந்தவராகவோ, தெரிந்தும் கரிசனம் கொண்டவராகவோ இல்லாது போனதும், தமது ஸ்தானத்தை வைத்து சலுகைகள் அரசாங்க வேலைகள் என்று பேரம் பேசியதும், தமது அதிகார வர்க்கத்தின் தளமான புதிய மத்திய வர்க்கத்தின் அபிலாசைகளை சிங்கள தேசிய வாதத்தின் நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றிப்

www.tamilarangam.net

பேணுவதிலுமே அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள் என்பது தகுந்த குற்றச்சாட்டுகள். அல்லாவிடில், வடக்கு கிழக்கின் புகையிலை ஏற்றுமதிக்கு சிங்கள அரசு குந்தகம் விளைவித்த போது, வெங்காய உற்பத்திக்கு உலை வைத்த போது, மாற்றீடு செய்யும் வக்கு இல்லாதவர்களாயினும் கூக்குரல் போட்டிருப்பர், தமது போலித் தமழீழக் கோரிக்கையை அன்றே முன்நிறுத்தியிருப்பர்.

**சோவனிச வளர்ச்சிக் காலம்**

பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய சமூகங்களின் கீழ்தட்டுகளின் ஊடாக, புதிய முதலாளித்துவ வர்க்கங்கள் அரச அதிகாரத்தை கைப்பற்ற முயலும்போது சோவனிச அரசியற் சித்தாந்தங்கள் உருவாகுவதும் வன்முறை-பயங்கரவாதம் சூழ்ந்த அரசியல்-கலாச்சாரம் அதற்கு காத்திரமாக அமைவதும் சரித்திரம் காட்டும் பெறுபேறு என்பதற்கு இலங்கையும் தகுந்த உதாரணம். இந் நிலைமையை ஜேர்மானியப் பாசிசவாதிகளுடன் ஒப்பீடு செய்வது சித்தாந்தத்தில் தப்பில்லா விடயம். ஓரேஒரு இன மக்கள் என்ற அடையாளத்துடன், வர்க்க வேறுபாடுகளை நிராகரிக்கும் அரசியல்-பொருளாதாரப் பிரகடனங்களுடன், அந்த ஓரேஒரு இன மக்களின் சுபீட்சத்தை மட்டுமே முன்னிறுத்தி அவற்றின் அடிப்படையிலே தமது எதிரிகளை அடையாளம் காண்பது பாசிச வாதச் சித்தாந்தங்களின் நடைமுறைப் போக்கு. எனவே, வன்முறை-பயங்கரவாதம் தம்முள் இல்லாது வெளியாரை முதலில் குறிவைத்து நகர்த்தப் படுவதும் தவிர்க்க முடியா இயங்கில் நியதி ஆகிறது. முதலாளித்துவ அபிலாசைகளையும், உழைப்பவர் நலிந்தவரதும் அபிலாசைகளையும் கூட்டிக்கட்டிய சித்தாந்தம் இருப்பதாக நடிப்பவர்கள், தம் இனத்துள்ளே யாரையும் எதிரிகளாக அடையாளம் காட்ட முடியாத நிலைமையை தமக்கு உருவாக்கி விடுகிறார்கள். ஆனமையால், தம்முள் எதிரிகளாக இருப்பவர்கள் துரோகிகளாகவும் ஐந்தாம் படையினராகவுமே இருக்க முடியும் என்பது இத்தர்க்கத் தொடர்ச்சியின் விளைவு.

இப்புதிய சித்தாந்தத்தை மேல்மட்ட அரசியலில் எடுத்துச் செல்ல அதற்கு உகந்த அரசியல்வாதிகளும், கீழ்மட்டத்தில் நிலைநாட்ட குண்டர்படைத் தலைவர்களாக ஒருபக்கத்திலும் சமூக-அரசியற் தலைவர்களாக இன்னொரு புறத்திலும் இருதலைகொண்ட பிறவிகளும், கூட்டாக இயங்க வேண்டிய காலமும் உருவாகியது. ஆகவே, சிங்கள-பௌத்த சோவனிசத்தை, அதற்கென ஒரு கடவுள் தேர்ந்த இனமும் முதலாளித்துவ மேலாதிக்க வரக்கங்களும் அதற்கேற்ற அரசியல் சித்தாந்தமும், பொருளாதாரச் சித்தாந்தமும், உழைக்கும் மக்களிடம் தளமும் இருப்பதனால், அதனைப் பாசிசச் சித்தாந்தமெனக் கூறுவது பொருத்தமானது.

இக்காலத்தில் ஆங்கிலத் திறமைகொண்ட பழைய அரசியல்வாதிகள் படிப்படியாக ஒழிந்து போனதையும், எஞ்சியவர் இச் சித்தாந்தத்தினை மறைமுகமாக ஏற்று தமது கைகளாலேயே அரச சாசனமயப் படுத்தி வைக்கப்பட வேண்டிய நிலைமை உருவானதையும் நாம் கண்ணால் கண்ட சரித்திரச் சம்பவங்கள். அறுபதுகளில் அரசியல் சாசனத்தை நோக்கிப் புறப்பட்ட இந்தச் சோவனிச இயக்கம் எழுபதுகளில் முழுமைகண்டபோது அது புதிய பொருளாதாரத்தின் அடிக்கற்களை காலனித்துவ பொருளாதாரத்தின் அத்திவாரங்களிலிருந்து பாரிய தூரம் விலத்திக் கொள்ளமுடியாது போனமை இச் சித்தாந்தத்தில் சிங்களச் சமூகத்தின் மேல்மட்ட அரசியல்வாதிளுக்கும் கீழ்மட்ட வர்க்கங்களுக்கும் இடையேயான அந்நியப்பாட்டிற்கு பிரதான காரணியாகிற்று. சுய-இயக்கம் என்ற அரசியற் சுலோகத்துள் பெரும் தோட்டங்கள் பொதுசன சேவைத் ஸ்தாபனங்களை 'தேசியமயப்படுத்தல்' என்ற செயற்பாட்டுகளுள் இலங்கையின் பொருளாதாரம் முடங்கிய காலமுமிது. இந்த நிலைமையை ஜே.வி.பி ஒரு புறத்தில் தனது கிளர்ச்சிக்கு சாதகமாக்கிக் கொண்டதையும் வர்க்க நிலைகள் கொண்ட மற்றைய அரசியல் அமைப்புகளும் தொழிற் சங்கங்களும் இந்நிலைக்கு புதிய முனைப்புகள் கொடுக்க முடியாது போனமையும் நாம் கூறும் பொருளாதார அடிகோலலை துல்லியமாக்கும் சரித்திரச் சம்பவங்கள். இனிமேல் வன்முறை-பயங்கரவாதம் என்பவை இலங்கை அரசியற்-கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக பரிணமிப்பதை யாரும் தடுக்க முடியாது. இக்காலத்தின் பொருளாதாரத்தை கவனித்தோர், அது சிங்கள மக்களது பெயரில் உள்நாட்டு குட்டி முதலாளித்துவ வாதிகளது கைப் பொருளானதும், அவர்கள் புதிய முதலாளித்துவ வர்க்கமாக பரிணமித்தமையையும், மற்ற இனங்களின் அரசியற்-பொருளாதார உடைமைகள் சிங்கள மக்களது பெயரில் சூவீகரம் செய்யப் பட்டதையுமே குறிக்கலாம். ஆனால், பொருளாதாரத்தின் அடித்தளம் தொடர்ந்தும் நவீன காலனித்துவதின் அமைப்புகளிலேயே தங்கி இருந்ததை அவர்களால் மாற்ற முடியவில்லை.

www.tamilarangam.net

**வடக்கும் கிழக்கும்**

தமிழ் பேசுவோரது நிலைமைகள் சிங்கள மக்களது போன்றே அதனது கண்ணாடிப் பிம்பமாக சற்றே தாமதித்து உருவாகுவதையும் முன்கூட்டியே கூறியிருக்கலாம். வெள்ளையருடன் வளர்ந்து பின்னர் அரச கைமாறலின் பின்னர் சிங்கள மிதவாத அரசியல்வாதிகளுடன் இணைந்து அரசியற் தலைமை கொடுப்பதையின்றி வேறெந்த வழியும் தமிழ் பேசும் தலைமைகளுக்கு இருக்கவில்லை. அவர்களது சமூகங்களோ பொருளாதார வளர்ச்சியில் சிங்களவரிலும் பின் தங்கியவராக இருந்தனர். ஆதலால், யாழ் குடாவில் கணிசமான தொகையினர் கல்வியில் முன்னேறி மத்தியவர்க்கம் ஒன்று உருவாக்கி இருந்தபோதிலும், அது சிங்கள முதலாளித்துவத்திற்கு சேவை செய்ய வேண்டிய நிலையிலேயே இருந்தது. அதாவது, அவர்களது கல்வி தொழிற் திறமைகளுக்கு ஈடாக வடக்கு கிழக்கில் பொருளாதார வளர்ச்சியோ திட்டங்களோ இருக்கவில்லை. அங்கே, பொதுவாக பாரம்பரிய முறையில் தோட்டம் மீன்பிடித் தொழில் செய்யும் பொருளாதாரமும் அதற்கேற்ற குடியானவர் பழைய சாதிய சமூதாயக் கட்டுகளுமே வடக்கு கிழக்கில் இருந்தன. உதாரணத்துக்கு ஆலைத்துறை உற்பத்தியோ தொழிலாளிகள் என்ற வளர்ச்சியோ இங்கு தகுந்த அளவில் இருக்கவில்லை, இன்றும்தான் வந்து சேரவில்லை.

இந்நிலையில் எழுபதுகளில் புதிதாகப் பிறந்த மாற்று அரசியற் தலைமைகள் சிங்கள அரசின் ஒடுக்குமுறைகளுக்கு நேரடி முகம் கொடுப்பதற்காக கிளர்ந்து எழுந்தமையால், பொருளாதார அடித்தளங்களின் விரக்தியினால் அல்லது வேற்றுமையினால் எழாது போனமையால், இவை மத்தியில் எழும்பிய வர்க்கச் சிந்தனைகள் ஏட்டுச் சுரைக்காய் போன்றவே அன்றி ஆக்கபூர்வமாக அமைய முடியாது போயிற்று. இச்சிந்தனைகளை மேற்கோண்டு செல்ல முயன்றோர் சாதியக் கொடுமைகளுக்கு மட்டுமே குரல் கொடுப்போராக வேண்டியவராகினர். மேலும், வன்முறை என்பதே அரச ஒடுக்கு முறையின் ஒரே பாசையாக அமைந்தமையால் அதற்கான மறு-பதிலும் அதேபாசையில்தான் அமைய வேண்டும் என்ற மனோவியல் நிர்ப்பந்தமே, தமிழ் அரசியல் வாதிகளது குண்டர் படையாக ஒழுகிய பலரை முன்னணிக்குத் தள்ளிற்று. முற்கூறியபடி, இவர்களுக்கு சமாந்தரமாக அரசியல் விழிப்புக்கொண்ட வர்க்க சிந்தனைகளுடன் ஈடுபாடு கொண்டிருந்த புதிய அரசியல் அமைப்புகள் உதித்தபோதும் அவை கொண்ட கருத்துகளுக்கேற்ப வடக்கு கிழக்கின் அரசியற்-பொருளாதார வளர்ச்சி இருக்கவில்லை என்பதுடன், பதிலாக அவ்வளர்ச்சியை நோக்கிய போக்கில் போராட்டத்தை அமைத்திட அக-புறச் சூழ்நிலைகள் அரசியல்-இடமோ காலாவகாசமோ கொடுக்கவில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

மக்களது போராட்டத்தை பொருளாதாரத்தில் இருந்து பிறிதுபடுத்திய அறிவுடன் போடப்பட்ட எந்த போராட்டத் திட்டங்களாலும் ஏற்படும் எதிர் விளைவுகள் முன்கூட்டியே சொல்லக்கூடியவை. அன்று பலர் கூறியும் இருந்தனர், இன்று நாம் அவற்றினை கண்முன்னே காண்கிறோம். இச் சிந்தனைச் சூனியத்தில், வடக்கு கிழக்கின் பின்தங்கிய பொருளாதாரச் சூழலில், வெகுவிரைவிலேயே வன்முறை என்பது தனிமனிதப்-பயங்கரவாதமாகவும், புரட்சி என்பது சிங்கள அரசின் இராணுவத்திற்கு எதிரான தாக்குதல் என்றும் நிர்மாணம் ஆகிடுவது எதிர்பார்க்க வேண்டியதே. இன்று தமக்கு ஓரளவு பொருளாதார ஸ்திரம் வேண்டும், சிறு வளர்ச்சி இருந்தாலே போதும் என பல சமூகங்கள் தமிழீழப் போரிலிருந்து அந்நியப்படுவதற்கும், அவ்வுணர்வுகளை சிங்களக் குட்டி-முதலாளித்துவர்கள் கடத்திச் சென்றார்களோ அதுபோலவே, தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பிராந்திய மத அடிப்படையிலான பிரிவினை வாதங்களை முன்செல்வதற்கு இடம் கொடுத்தமைக்கும் இச் சிந்தனைச் சூனியமே பிரதான காரணி என்று கூறுவதும் தப்பல்ல.

**உலகமயக் காலம்**

இன்று அரசியற்-கலாச்சாரமாக உருவாகிவிட்ட தனிமனிதப் பயங்கரவாதத்தின் விளைவாக உள்ளும் புறமும் நடத்தப்படும் அரசியற் படுகொலைகள் இன்று சமூகத் தலைமைத்துவம் என்பது துப்பாக்கியின் ஆதரவின்றி இடம் பெறமுடியாத காரியமாகவும், வன்முறை-பயங்கரவாதத் தொடர்புகளின்றி சமூகத்தின் எந்த மட்டத்திலும் அதிகாரம் செலுத்த முடியாது என்ற நிலையும் இலங்கையின் சகல சமூகங்களிடையேயும் நியதி ஆகிவிட்டது. இன்றைய அரசியல்வாதிகள் அப்பட்டமாகவே வன்முறை-பயங்கரவாதத்துடன் நேரடித் தொடர்பு கொண்டவர்கள். இப்படியான நிலைமை பொருளாதார வளர்ச்சி என்றால் அது எதனைக் குறிக்கின்றது என்ற கேள்விக்கு இன்னுமொரு பரிணாமம் தருகின்றது.

www.tamilarangam.net

ஒரு நாடு சிதைந்து போகும்போது, அதாவது கட்டிழந்து போகும்போது வன்முறைவாதிகளும் அரசுக்கு அப்பாற்பட்டவர்களும் அப்பொருளாதாரத்தை கைப்பற்றிக் கொள்கிறார்கள். ஏன், அவர்கள் கையேற்கிறார்கள் என்றாலும் மிகையாகாது. சோவியத் கூட்டரசு உடையத் தொடங்கியதும் ருசிய வன்முறைச் சமுதாயம் (Mafia) பொருளாதாரத்தின் பெரும் பகுதியை நிர்வாகித்ததையும் இன்று பொருளாதாரச் சீர்நிலை ஏற்பட்டதும் மத்திய சமூக ஸ்தாபனங்கள் மீண்டும் தம்மை அதிகாரத்தில் இருத்திக் கொள்வதையும்தான் கண்டுள்ளோம். இந்நிலை ஐக்கிய அமரிக்காவிலும்தான் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தது என்பது எமது வாதத்திற்கு காத்திரமானது.

இலங்கையின் பொருளாதாரம் மூன்று, (1) தனியார் (2) அரச (3) மறைமுக ஸ்தாபனங்களூடாக இயங்குகின்றது. தனியார் எனும்போது தனிப்பட்டோர் ஸ்தாபனங்களையும், அரச சார்பிலா தனியார் ஸ்தாபனங்களையும் குறிக்கும். நிர்வாகத்துறை, பாதுகாவலர் துறை, இராணுவம், கூட்டு ஸ்தாபனங்கள் யாவும் அரச ஸ்தாபனங்கள் என்ற வரைவுள் அடங்கும். மறைமுக அமைப்புகளாக கறுப்புப் பொருளாதாரத்தில் ஈடுபடுபவர்களும் வன்முறை-பயங்கரவாதம் ஊழல் போன்றவற்றால் இயங்கும் பொருளாதாரத்தில் உள்ளவர்களும் அடங்குவர்.
இம் மூன்றின் பொருளாதார ஈடுபாடுகளையும் அல்லது உற்பத்திகளையும் (1) விவசாய தோட்ட துறை (agricultural) (2) ஆலைத் துறை (industrial) (3) சேவைத் துறை (service) என்ற மூன்று பாகங்களாக கணிப்பது வழக்கம்.
காணியிலிருந்து புல், பூண்டு, மரம் செடி கொடிகளது விளைச்சலில் இருந்து பயன் பெறுவது விவசாயத் துறை என்பதை நாகரீக வளர்ச்சியில் முதல் அடி எடுத்த மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னரே தெரிந்திருப்பான். ஆலைத் துறை எனும் போது தாதுப் பொருட்கள் இரத்தினக்கல் போன்றவற்றிக்கான அகழ்வு, மின்சாரம் போன்ற சக்தித் துறை, தொழில் சாலைகளில் அல்லது குடிசைக் கைத்தொழிலாக பொருட்களின் உற்பத்தி, என்றவாறு மனிதனது உழைப்பும் கருவிகளும் இணைந்து அமைப்பு ரீதியிலான உற்பத்தியில் ஈடுபடும் துறையை குறிப்பிடுகின்றோம். சேவைத் துறை எனும்போது உற்பத்திக்கும் கொள்வனவு செய்பவர்களுக்கும், அதாவது உற்பத்தியை நுகர்பவர்கும் இடையிலான உறவை பேணும் அல்லது நிர்வாகம் செய்யும் அல்லது பாதுகாக்கும் தொழில்கள் யாவும் உள்ளடங்குகின்றன. அதாவது, இராணுவம் பாதுகாவலர் அரச நிர்வாகம் போன்ற துறை, வானொலி தொலைக்காட்சி தொலை பேசி கணணனி போன்ற தொடர்புத் துறை, வங்கி போன்ற பணம் சம்பந்தமான துறை, உல்லாசத் துறை, கட்டிடத் துறை, வெளி நாட்டு உழைப்பு, போன்றவை உள்ளடங்கும்.

இலங்கையின் பொருளாதாரம் 6.5% வளர்ச்சி காண்கிறது என்பது ஆசியாவில் வளரும் நாடுகளிடையே பெரிய விடயமல்ல. பாழாகிப் போன கம்புச்சியாவும்தான் 6.9% வளர்ச்சி காண்கிறது. மேலும், ஐ.அமரிக்கா 1% வளர்ச்சி அடைகிறது என்றால் அது சராசரி அமரிக்க மனிதனுக்கு $180 மேலதிகமாக ஒரு வருடத்தில் சேர்கிறது. ஆனால், சிறீ லங்காவில் 6.5% வளர்ச்சி என்றால் அங்கே சராசரியாக ஒரு சிங்கள மனிதன் $6 மேலதிகமாகப் ஒரு வருடத்தில் பெறுகிறான் என்பதே கணிப்பு. அந்த $6 முழுமையாக உழைப்பாளியைப் போய்ச் சேர்கிறதா? என்பது அதனைவிட முக்கிய விடயம். ஆசியாவின் வளரும் நாடுகளுள் அறுபதாம் ஆண்டுகளிலேயே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களது (literacy) தொகை 98% ஆகவும், கல்வித்துறை முன்னேற்றம் கண்டதாகவும், நெடும்பாதைகள் சாலைகள் செறிவாகவும், இலங்கை இருந்தது என்ற தரவுகளுடன் இணைத்துப் பார்க்கும் போது இலங்கை பின்னேறியுள்ள நாடு என்றே பொருளியல் நிபுணர்கள் கணிப்பார்கள். அதாவது, இலங்கையின் பொருளாதாரம் எதனைச் சாதித்துள்ளது என்பதுடன் தங்கிவிடாது அது கொண்டிருந்த சாதகமான காரணிகளுடன் இன்று எங்கு சென்றடைந்திருக்க வேண்டும் என்றே நாம் கேட்க வேண்டும், என்பது இவர்களது விளக்கம். எமது பிள்ளைகள் பாடசாலைகளில் 7 வருடங்கள் காலம் கடத்தியபின் முடிவில் அவர்கள் முதலாம் வகுப்பினை மிகவும் தாராளமான புள்ளிகளுடன் சித்தி அடைந்திருக்கிறார்கள் என்று அறிக்கை கிட்டினால் அதை மாபெரும் சாதனை என்று கொண்டாடிவிடவா போகிறோம்?
மேலும், இவ் 6.5% வளர்ச்சிக்கான அடிக் காரணிகளைத் தேடினால் அவை பொதுவாக சேவைத் துறையில் இருந்தே பெறப்படுகிறது என்பது புரிகிறது. தொடர்பு (telecommunication) மற்றும் பணத் துறையும் (financial services) கட்டிடத் துறையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(construction) இலங்கையின் வளர்ச்சிக்கு 68% காரணம் என்பதை இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரங்களே கூறுகின்றன. அவற்றையும் மீறி மக்கள் பார்வையில் இத் தரவுகளைக் கிளறிப் பார்த்தால் நிலைமைகள் மேலும் துலக்கமாகும். உண்மையில், இலங்கையின் இந்த வளர்ச்சியின் ஒவ்வொரு விகிதத்தின் போதும் வறுமையின் வீழ்ச்சி 0.4% ஆகவே உள்ளது. சமூதாயத்தில் செல்வம் கொளித்தோர்க்கும் கீழ்மட்டத்தில் வாழ்பவர்களுக்கும் இடையிலான வெளி வருடாந்தம் 2% விரிந்தபடியே போகிறது. மேலும், இந்த மூலதனமெல்லாம் மேற்கு மாகாணத்திலேயே (கொழும்பு, கம்பகா, கழுத்துறை) குமைந்து கிடக்கிறது என்பதையும், நாட்டுப்புற வளர்ச்சியின் புள்ளி விபரங்களையும், சற்றே கவனித்தால் அவை மேலும் பின்தங்கிவையாகவும் இவ்விரிசல்கள் அதிகரிக்கும் நிலையிலேயுமே உள்ளது.

இந்தியா சீனாவிலோ பொருளாதார வளர்ச்சிக்கும் வறுமையின் வீழ்ச்சிக்கும் இடையே நேரடித் தொடர்பு உள்ளது என்பதை பல விதமான அறிக்கைகளும் குறிக்கின்றன. உலகமயப்படுத்தல் வறுமையானோருக்கு சாதகமானதா என வர்க்கச் சிந்தனை கொண்ட யாரும் கேட்க வேண்டிய கேள்வி. "உலகமயப்படுத்தலால் வறியவர்கள் மேலும் வறுமையாவதும் செல்வர்கள் மேலும் செல்வர்களாகுவதுமே இயங்கியல் நியதி" என்கிறார் நோம் சோம்ஸ்கி. இவர் வறியவர்க்கும் செல்வருக்கும் இடையிலான விரிசலின் வளர்ச்சிபற்றியே பேசுகிறார் என்பதிலும், பொருளாதார வளர்ச்சியால் சமுகத்தின் கீழ் தட்டுகளது நிலை உயர்கிறதா என்றே வினவுகிறார் என்பதிலும் நாம் தெளிவாக இருக்க வேண்டும். பெருநிலைவரியான கணிப்பில் ஒரு நாட்டின் சராசரிக் கணிப்புகளில் உயர்ச்சி அடையும் விவசாய உற்பத்தியும், வளர்ச்சிக்கு உகந்த அரச மூலதனமும் (மக்கள்பால்), விவசாயம் சாரா உற்பத்திகளின் அதிகரிப்பும் (non-aggricultural products), குறைவானதாகவும் கட்டுக்குள் உள்ளதுமான பணவீக்கமும் இருப்பின், உலகமயப்படுத்தலின் போதும்கூட வறுமையானோருக்கு சாதகமான நிலைகள் இருக்க முடியும் என்பது பல பொருளியல்வாதிகளது கருத்து.

இவ்வாறு இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஊக்கி முன்னெடுத்து, இன்றும் அதனைக் கொண்டு செல்வது 2002 புலிகள்-சிறீ லங்கா MOU ஒப்பந்தத்தின் பிற்பாடு வெளிநாடுகளிலிருந்து வந்து சேரும் பணமேயாகும். இதற்கு விதி விலக்காக, சுனாமி அழிவைத் தொடர்ந்து வெளிநாட்டு உதவிகளாக $350 கோடி மூலதனமாக வந்த உதவிகளும் காரணிகள் ஆகிறன. இதில் $75 கோடி வடக்கு கிழக்கில் பாதை போடுவது, இரணைமடு போன்ற தண்ணீர்த் திட்டங்கள், சிறு பண்ணை, சமூகத் திட்டங்கள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். மேலும், புலம் பெயர்ந்தோர் குறிப்பாகத் தமிழர் கொழும்பையும் அதனைச் சுற்றிய பகுதிளிலும் பாரியளவில் கட்டிடத் துறையில் மூலதனம் (சுமார் $150 கோடி) இட்டுள்ளார்கள் என்பதையும் அறிவோம். இன்று வெளிநாடுகளில் வேலை செய்பவர்களது ஊதியமும், புலம் பெயர்ந்தோர் ஈட்டித்தரும் அந்நியச் செலாவணியும் கணிசமானது ($251 கோடி). இலங்கையின் பாரிய ஏற்றுமதியென நாம் கருதும் தேயிலையின் விலை பெரிதாக உயர்ந்து கொண்டுள்ள நிலையிலும்கூட அது கடந்த வருடம் $103 கோடியை மட்டுமே பெற்றுத் தந்துள்ளது. மேலும், உல்லாசத் துறையின் வருமானம் $38 கோடி மட்டுமே. மேலும், இந்த $250 கோடி பணவருகையில் சுமார் 30 - 35 % ($85 கோடி) புலம் பெயர்ந்த தமிழர்களால் வருடாவருடம் உறவினரது பராமரிப்புக்காக அல்லது முதலீடாக அனுப்பப்படுகிறது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

சிறீ லங்காவின் வெளிநாட்டு உதவிகள் கடந்த வருடம் $105 கோடியாகும். இவற்றைவிட, மிகக் குறைந்த வட்டியுடன் இந்தியா, சீனா போன்ற நாடுகளும் அண்மையில் ஈரானும் பண உதவி செய்வதையும் நாம் அறிவோம். அதேவேளை, அரசாங்கம் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் ($129 கோடி) தனியார் வங்கிகளூடாக பாரிய கடன்களைப் பெற்றுள்ளதையும் அதன் நேரடி விளைவாக 20% - 27% (எந்த அரசக் கணிப்பீட்டை எடுப்பது என்பதைப் பொறுத்து) பணவீக்கம் நிலவுவதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கட்டிடத்துறை எனும்போது, பழைய கட்டிடத்தை உடைத்துக் கட்டும்போதே ஏதாவது பொருளாதாரச் சுறுசுறுப்பு இடம்பெறுகிறது என்பதையும் அங்குள்ள தொழிலாளிகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏதாவது பயன் என்பதையும் நாம் யாரும்தான் ஊகித்துக் கொள்ளலாம். இல்லாவிடின் அவை மூலதனத்தின் பெறுமதியைக் காப்பாற்ற அல்லது கூட்டுவதற்காக, பொன் போலவே, இன்னுமொரு முதலீட்டுப் பண்டம் என்றும் அறிவோம். இந்த முதலாளித்துவ பொருளாதார வாதிகளைக் கேட்பீர்களாயின், 35 ஆயிரம் பொதுமக்கள் சுனாமியால் அழிந்தார்களோ என்னவோ, இலட்சக் கணக்கில் தொழிலாளிகள் வாழ்விழந்தார்களோ இல்லையோ சுனாமி என்பது பெரும் வரப்பிரசாதம்.
இலங்கையின் பொருளாதாரத்தை மக்களது சனத்தொகை வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் அங்கே விவசாய, ஆலை, சேவை என்ற எந்தத் துறையிலும் விகிதாசாரத்தில் முன்னேற்றம் காணவில்லை என்பதை புரிந்து கொள்வர்.
விவசாயதிலேயே தமது அன்றாட வாழ்வுக்குத் தங்கியுள்ள குடியானவரைக் (58% நாட்டுப்புற மக்கள்) கொண்ட தீவிலோ அத்துறையின் உற்பத்தி குறைக்துள்ளதையும் அதக்கீடாக சேவைத்துறையே சற்று வளர்ந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவர்.
இலங்கையில் 88% மக்கள் இன்றும் நாட்டுப் புறத்திலேயே வாழ்கிறார்கள்.
இலங்கையின் பொருளாதாரத்துள், சிறீ லங்காவினது பொருளாதார வளர்ச்சி இந்தியா சீனா போன்று தெட்டம் தெட்டமானதன்று. இங்கே நாட்டுப்புறம் என்பதை மிகவும் சுலபமாக மேற்குமாகாணத்தை தவிர்ந்த சிங்களப்-பிராந்தியம் என்று யாரும் வரைவு செய்து விடலாம்.

சேவைத்துறை எனும்போது இராணுவமும் அவற்றுள் அடங்கும் என்பதை அவதானிப்போர் அதற்கான செலவு 5.3% என்ற ஜே. ஆர் காலத்து உச்சத்தை எட்டாது போகினும் 2.7% (GDP) என்பதையும் குறிக்கும்போது அவர்கள் தமிழராக இருப்பின் இக்கணிப்பில் உள்ளடங்கும் விசத்தை விசமத்தனத்துடன் சலித்துக் கொள்வர். மேலும், 2.2% கல்வித்துறையிலும் 1.5% மட்டுமே சுகாதாரத்துறையிலும் செலவிடப்படுகியது எனும்போது அவர்கள் மனிதாபிகளாக இருந்தால் சபித்துக் கொள்வர், மக்கள் மேல் மூலதனமிடாத இரணியர்கள் மீது மனத்துள் காறி உமிழ்ந்திடுவார். 6.5% வளர்ச்சியோ ஆசியாவில் பின்தங்கிய எந்தப் பொருளாதாரமும் காணும் வளர்ச்சி என்பதை தெரிந்து கொண்டு 20% மேலான பண வீக்கமும், இலங்கையரது PPP (GDP), அதாவது கொள்வனவுத் தகமையின் ஒப்பீடு (US) எனும்போது அது மாற்றமே இல்லாதது என்பதை உலக முன்னேற்றங்களுடன் கூட்டிக் கணித்தால், இலங்கையின் தொழிலாளிகள் தமது வாழ்க்கைத் தராதரத்தில் இழப்புகளையே கண்டுள்ளார்கள் என்பதை துல்லியமாகச் சுட்டிக்காட்டிட முடியும்.

புலம் பெயர்ந்த நாம் எமது தனிப்பட்ட பொருளாதார நிலைமைகளைக் கணிக்கும்போது இலங்கையிலுள்ள எமது உறவினர்களுடனா ஒப்பீடு செய்கிறோம்? நாம் எம்மிலும் மேலான வசதிகளுடன் எம்மிடையே வாழும் தமிழருடன் ஒப்பிடுவோம், அவர்களோ தமக்கீடான வெள்ளையருடன் ஒப்பிடுவர். அதாவது, பொருளாதாரத்தில் முன்னேற்றம் என்பதை பின்னோக்கிப் பார்த்து யாரும் கணிப்பிடுவதில்லை. எனவே, உலகமயப்படுத்தலின் மத்தியில் வாழும் எமது உறவினர்கள் மட்டும் ஏன் தம்முள்ளே உள்ள வறியவர்களுடன் ஒப்பிட்டு, "நாம் ஒரு நேரச் சாப்பாட்டுடன் மரத்தின் கீழே உயிரோடு வாழ்ந்தாலே போதும்" என்ற வரையறுப்புள் கணிப்பீடுகள் கொள்ள வேண்டும்?
அதிலும் அண்டை நாட்டைப் பார்த்து அவர்களது வறுமையிலும் பொறுமையிலும் தற்பெருமை கொண்ட மத்திய வர்க்கத்தினரை மையவாதிகளாகக் கொண்டவர் நாம். இன்று அந்த நாட்டில் வளர்ந்துள்ள 35 கோடி மத்திய வர்க்கத்தினர் அமரிக்க வர்த்தகர்களது மூலதன வியாபாரிகளது வாய்களில் வீணீர் வடிய வைப்பதைப் பார்க்கிறோம், அதனால் அவர்களது கொள்வனவுச் சக்தியின் (PP) வளர்ச்சியையும் அவதானிக்கின்றோம். இந்தியா கொண்டுள்ள வளர்ச்சிக்கும் எமது தீவின் வளர்ச்சிக்கும் இடைவெளியை பாரிய விரிச்சலடைய நாம் அநுமதிக்க முடியுமா? என்றும் நாம் எம்மை இங்கு வினவ வேண்டும்.
எட்டாப் பழம் புளிக்கும் என்ற மனோநிலையில், தான் பிடித்த முயலுக்கு மூன்றேதான் கால்கள் என அடம்பிடித்து விவாதிப்பவனுக்கோ உழைப்பாளிகள் பற்றிய அக்கறை என்றுமே இருந்ததில்லை. ஆகவே, அவனுக்கு அங்கே இன்றும் உள்ள பிச்சைக்காரர்களே கண்ணில் தென்படும், தொழில் நுட்பத்துறையிலும் அவற்றின் உற்பத்தித் துறையிலும் இந்தியா அடையும் வேகம் தெரிந்தாலும் அவற்றின் விளைவுகள்பற்றி புரிந்து கொள்ளும் இயல்புகளோ அற்ற பேதை அவன். ஆதலால், ஏகாதிபத்தியம் என்பான், முதலாளித்துவம் என்பான், "உமது நிலைப்பாடு என்ன?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று கேட்டால் போதும், உழைக்கும் மக்களுக்கு இருப்பே இல்லாத, ஏதாவது தேசியம் பறைவான்.

**சோசனிச அரசியற்-பொருளாதாரத்தின் சாதனை**

ஆக, எழுபதுகளில் அரசியற் பொருளாதாரமாக சாசனமேறிய சிங்கள-பௌத்த சோவனிசம் எவற்றைத்தான் சாதித்துள்ளது?

தென் ஆபிக்க இனவெறி வெள்ளையரது 'பிறிம்பான இனங்களின் பிறிம்பான வளர்ச்சி' என்ற இனவாரியான பொருளாதாரத் திட்டம் போல (separate development) இலங்கையில் இன்று மூன்று பொருளாதாரங்கள் உண்டென்பதை சிறீ லங்கா என்று கூறிக் கொள்ளும் அது ஏற்படுத்தியுள்ளது.

சிங்களச் சோவனிசத்தின் நேரடி விளைவாக, சிங்கள நகர்ப்புற, சிங்கள நாட்டுப்புற, தமிழரது என்ற பரிணாமத்தில் மூன்று அரசியற்-பொருளாதாரங்கள் இலங்கையில் உருவாகி உள்ளன என நாம் வகைப்படுத்துவது மேலே தந்த புள்ளி விபரங்களின் ஊடாக சான்று பெறும் வாதம். மேலும், மாகாணசபைகளின் அநுபவங்களால் ஆதாரம் சேர்க்கும் வாதம். வடக்கு கிழக்கு பொருளாதாரங்களே கணக்கில் எடுக்கப்படாத போது, மலை நாட்டுத் தமிழரது வறுமை 55% உயர்ந்துள்ளபோது நாம் சொல்லாமலே எழும் செயற்கையிலா வாதம்.

ஏன் இந்தியாவில் சரி சீனாவில் சரி நாட்டு - நகர்ப் புற பொருளாதார வேறுபாடுகள் எழவில்லையா? செல்வருக்கும் உழைப்போருக்கும் இடையிலான வெளி (GINI coefficient) அங்கேயும் கிட்டத்தட்ட சிறீ லங்காவின் விகிதத்தில் பெருகவில்லையா? என்பவை வெறும் தர்க்க ரீதியில் சரியான கேள்விகள்தான்.

இந்த இரு நாடுகளினதும் பொருளாதாரங்கள் பிரமாண்டமானவை என்று கூறிவிடுவதே தர்க்க ரீதியில் இதற்கு பொருத்தமான பதிலாகிவிடும். மேலும், உலகின் கொள்வனவில் முதலாவது பொருளாதாரமான ஐ.அமரிக்காவில் நிலைமைகள் இது போலவே உள்ளன என்பது மேலும் ஒரு நொட்டைச் சான்று பகரும். முதலாளித்துவ பொருளியல்வாதிகளது பார்வைக்கு இவை ஒருவேளை போதும். நாமோ மக்களது-பயன் என்ற ரீதியில் இவற்றினை அணுக வேண்டும் என்ற கோட்பாடு கொண்டவர்கள்.

1870 ஆண்டு தரவுகளின்படி சீனாவில் எழுத-வாசிக்கத் தெரிந்தவர் தொகை 21% ஆகும். ஆண்மைத் தன்மையின் உக்கிரமான காலத்தில் இதன் அர்த்தம் ஆண்தொகையில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் (42%) எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருந்துள்ளார்கள் என்பது. தென் ஆசியாவின் (இந்தியாவின்) இக்கால நிலையோ ஆபிக்கக் கண்டத்திற்கு ஒப்பான 3% மட்டுமே, அதாவது 6% ஆண்களுக்கு மட்டுமே அன்று எழுத வாசிக்கத் தெரிந்திருக்கும் (தென் அமரிக்கா 15%). ஆபிரிக்காவில் வெள்ளையர் வரும்வரை எழுத்து முறை இருக்கவில்லை என்பதையும் தென் ஆசியாவில் நாம் பெருமையுடன் எம்மின மொழி என்று எமது உயிரையே அர்ப்பணிக்கும் மொழிகள் நூற்றிலும் மேலாக இருந்தன என்பதையும் தெரிந்து கொள்ளும் போது மக்களது சமூக நிலை என்ன என்பது எந்த தேசிய-முரடனாலும் கூட ஊகித்துக் கொள்ளக் கூடிய விடயம். (ஆபிரக்காவில், வெறும் பேச்சு வழக்கே இருந்தது, கிழக்குப்பாகத்தில் உருவாகிய சுவாகிலி வெள்ளையர் வர பல நூற்றாண்டுகள் முன்னரே தூர்ந்து போயிற்று. இன்று இலத்தின் அல்லது அரபு எழுத்துகள் ஊடாக தமது மொழியில் வெளிப்பாடு செய்கிறார்கள்.) ஆகவே, சீனாவையும் இந்தியாவையும் ஒப்பீடு செய்யும் போது, குறிப்பாக மக்கள் என்ற ரீதியில் ஒப்பிடும்போது நாம் மிகுந்த சிரத்தை காட்ட வேண்டும்.

இவ்விரு நாடுகளின் சாராசரியாகக் காட்டப்படும் பெருநிலைவாரியான புள்ளி விபரங்கள் வறுமை வீழ்ச்சி, பாடசாலையில் பிள்ளைகள் தொகை, சுகாதாரம், ஆண் - பெண் முன்னேற்றங்களின் இடைவெளி என்ற இன்னபல குறிகாட்டிகளிலும் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளதாகச் சொல்கின்றன. மேலும், பிராந்திய பொருளாதார மையங்கள் பல உருவாகி உள்ளமை நகர - நாட்டுப்புற வேற்றுமைக்கு பாரிய இடம் கொடுக்காது தடுத்துள்ளது என்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது. ஆக, இங்கெல்லாம் பொருளாதாரம் என்பது நகர்புற மையவாதங்களுள் அடங்க வேண்டும் என்ற ஓட்டம் புதிதாக உருவாகி உள்ளது. இதனைவிட இந்தியாவில் மாநில அரசுகள் நுண்நிலைவாரியான பொருளாதாரத்திற்கு பொறுப்பாக உள்ளன. சீனாவிலும் இன்னுமொரு அரசமைப்புவடிவில் இதே காரியங்களை ஒப்பேற்றும் பொறுப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிராந்தியங்களுக்கு உள்ளன. ஆக, இந்நாடுகளின் வளர்ச்சி தெட்டம் தெட்டமானதாக இருப்பினும் அவற்றினைப் பாராமரிக்க தகுந்த அதிகார வசதிகள் பிராந்தியங்களிடம் உள்ளன என்பதும், அடிப்படையில் நவீனமயப் படுத்துவதே ஓட்டம் என்பதும் போதுமான வாதமாகின்றன.
இவற்றைவிட பின் தங்கியோருக்கு சமூகப்பொருளாதார ஈடுசெய்யும் வகையில் இந்தியாவில் 9வது அதிகாரம் சாசனத்தில் (9th Schedule) உள்ளது என்று வேறு சுட்டிக்காட்டப் படுகிறது. அதாவது பெரு / நுண் நிலைவாரியாக சகல பொருளாதார அமைப்பு வடிவங்கள் (structures) வழங்கப்பட்டுள்ளன, அவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு மாற்றி அமைக்கப்பட சாசனத்தில் வழியும் தரப்பட்டுள்ளது என்பது முற்றான வாதம்.
மேலும், சீனா உலகத்தின் ஆலைத் தளமாகிவிட்டதெனவும் (factory floor) இந்தியா அறிவுவாரியான பொருளாதாரம் (knowledge based) எனவும் கணிப்புகள் உள்ளதுடன் இவற்றின் பொருளாதாரங்கள் சகல துறைகளையும் பூரணமாக உள்ளடக்கியவை என்றும் பார்க்கும் போது நாம் நாட்டுகளையின்றி 200 கோடிகளுக்கு மேலான மக்களை உள்ளடக்கிய இரு (உப) கண்டங்களின் பொருளாதாரங்களைப் பற்றியே பேசுகிறோம் என்பது புரியும்.

இலங்கையின் நிலையோ மேற்படி வாதங்களை ஏற்று, முதலாளித்துவ பொருளாதார நிலைப்பாடுகளில் இருந்து பார்த்தாலும் மாறுபட்டவை. முதலாவதாக, அது மிகவும் சிறிய பொருளாதாரம் என்பது யாருக்கும் தெரிந்த விடயம். அவ்வகையில், இப்பெரிய நாடுகளில் இடம்பெறும் குறைபாடுகள் அதே விகிதாசாரத்தில் ஒப்பிடப்பட வேண்டியவை. மேலும், வடக்கு கிழக்கு மலையக மக்கள் தவிர்ந்த பொருளாதாரத்தைப் பற்றியே சிங்கள அரசாங்கம் கவனிக்கும் போது அங்குள்ள குறைபாடுகளை அப்பாரிய பொருளாதாரங்களுடன் ஒப்பிட்டு மன்னித்திடுவது தவறானது. மேலும், கொழும்பையும் அதுசார்ந்த மேற்கு மாகாணத்திலும் இடம்பெறும் வளர்ச்சி மற்றய சகல மாகாணங்களிலும் உயர்வானது, அது வெளிநாட்டுப் பணவருகையால் ஏற்படுவது என்பதையும் சேர்த்துப் பார்க்கும்போது இந்தப் பாராபட்சத்திற்கு மாற்றீடு செய்ய முடியாத நிலையிலேயே அரசு உள்ளது என்பதும் தென்படும். மேலும் இவற்றிக்கு முகம் கொடுக்கக்கூடிய பிராந்தியக் கட்டமைப்போ, இந்தியாவிலுள்ளது போன்ற பின் தங்கியோருக்கான சாசன வழியமைப்புகளோ அரசமைப்பில் இல்லை. இவ் வெற்றிடத்தை வெளிநாட்டு அரசுவார்பற்ற ஸ்தாபனங்கள் நிரப்பவும் இலங்கைத் தீவினை ஒரு பரீட்சைத்தலம் ஆக்கிடவும் முனைவதையும் நாம் அவதானிக்கலாம். ஆகவே, சிங்கள-நாட்டுப்புறப் பொருளாதாரம் பிறம்பானது என முடிவு செய்வதில் தப்பில்லை. இன்று சிம்பாவேயில் பணவீக்கம் 2,000,000%, அதாவது இருபது இலட்சவீதம் எனும்போது விலைகள் மணித்தியாலத்திற்கு 225% அதிகரித்த வண்ணம் உள்ளது என்று கணிக்கலாம். அதாவது 11 மணிக்கு $1 பெறுமதியான பாண் 12 மணியளவில் $3.25 ஆக உயர்ந்து விடும். ஆனால், இந்த வீதத்தில் பொருட்கள் விலை ஏறினால் யாரால்தான் பண்டங்கள் வாங்கி உயிர்வாழ முடியும். எனவே அங்கே மக்களது பொருளாதாரம் என்று ஒன்றும் அரச கணிப்புகளுக்குள் அடங்கிய பொருளாதாரமென வேறொன்றும் இருக்கின்றது என்பது தெளிவு. அதுபோலவே, சிங்களப் பொருளாதாரத்திலும் நாட்டுப்புறப் பொருளாதாரம் பிறம்பாக இயங்குகின்றது என்பதும் இது இந்திய அல்லது சீன நிலைமைகளில் இருந்து வேறுபட்டது என்பதும் முடிவில், சிங்கள-நாட்டுப்புறப் பொருளாதரம் என்பது பிறம்பானது என்பதுமே எமது வாதம்.

தமிழர்களது வாழ்வு வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து பிறம்பானது என்பதற்கு முதலீட்டின்மை, ஏற்கனவே உருவாகி இருந்த விவசாயத்துறைக்கு எதிரான அரச நடத்தைகள், தண்ணீர் வசதிகளின் தூர்வு, மாகாவலித் திட்டம், சிங்களக் குடியேற்றங்கள், தமிழரை கடலுள் அனுப்புவேன் என்ற ஜே.ஆரின் அறை கூவலுடன் தொடங்கிய போர், இன்று பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் என்றவாறு தொடர்ந்து இடம்பெறும் இன-அகற்றல், இடையே கிழக்கில் மாகாணசபை என்ற கண்துடைப்பு, அன்றும் இன்றும் தமிழர் பெரும்பாலும் தம்பிரதேசங்களுக்கு அப்பால் தொழிலாற்றும் நிலை, என்று நாம் அடுக்கிக் கொண்டே போகக் கூடிய காரணிகள் பல. இவை தமிழர்கள் அன்றிலிருந்து இன்றுவரை பிறம்பான பொருளாதத்தில் இயங்குபவர்கள் என்பதற்கு அதிகத்திற்கும் மேலான சான்றுகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலையகத் தமிழரோ சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் பிறத்தியாராக, அடிமைகளாக, கொத்தடிமைகளாக, பல துறைகளிலும் அரசியல்-பொருளாதார கட்டமைப்பு ரீதியில் ஒதுக்கப்படுவதனால் பிறம்பான பொருளாரத்தில் இயங்கும் மக்கள். தென் ஆசியா முழுவதும் வறுமை வீழ்ச்சி காணும் நிலையில் எதிர்மாறாக மேலதிக வறுமையின் அதிகரிப்புள் உறையும் சமூகம். எனவே, இவர்கள் சிங்கள அரசின், அவர்சார்பில் அமைந்துள்ள பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று முடிவுகொள்வது சரியானதே.
ஒட்டு மொத்தத்தில் இலங்கையில் சிங்களப்-பொருளாதாரம் தமிழ்-பொருளாதாரம் என இரண்டு உள்ளது என்பதும், அப்பேதம் அரசாலும் அதன் ஸ்தாபனங்களாலும் பேணப்படுவது என்பதும் விவாதங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்கள், உலக பொருளியல்வாதிகளால் ஒத்துக் கொள்ளப்படும் உண்மைகள்.

ஆக, சிங்கள-பௌத்த சோவனிசம் தனது இனவாதப் பொருளாதாரத்தை அரசேற்றியதில் வெற்றி பெற்றிருந்தாலும் அதனது சிங்களப் பெரும் தேசியத்துடன் இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தால் சிங்கள மக்கள் எதிர்விளைவுகளையே பெற்றுள்ளனர். சிங்கள உழைக்கும் மக்கள் அதன் பொதியை இன்று தூக்கிச் செல்ல வேண்டிய நிலையில் மட்டுமே உள்ளார்கள். ஒருபுறத்தில் தமிழருக்கு எதிரான போருக்கான உடலையும் உயிரையும் தருபவர்கள் மறுபுறத்தில் தமது அரசினால் ஏற்பட்டுள்ள பொருளாதாரத்துள் நலிந்துகொண்டே போகிறார்கள். இலங்கையை சிங்களமயமாக்கும் அதனது அரசியற் திட்டமோ இந்திய-சிறீ லங்கா ஒப்பந்தத்துடன் புரைந்து போயிற்று, புலிகளை அழிப்பதனால் தனக்கு வெற்றி என்ற போலிச் சடங்கில் மட்டுமே தங்கியுள்ளது.
மேலும், உலகமயப்படுத்தலால் சிங்கள முதலாளித்துவம் ஒரு புதிய பிரளயத்தை எதிர் நோக்குகின்றது. இதுவரை காலமும் பிராந்தியப் பலவான் இந்தியா, உள்நாட்டு எதிரி தமிழர் என்றவாறு தன்னை ஒட்டுமொத்தமாகக் கட்டிக் காத்துக் கொண்ட இது இனிமேலும் அவ்விரு சர்ச்சைகளின் பின்னாலே ஒளிந்து கொண்ள முடியாது. ஆகவே, சுய-இயக்க உள்நாட்டு முதளாளித்துவம் - சர்வதேசிய முதலாளித்துவத்துடன் இணைுந்து போகும் முதலாளித்துவம் என்ற வகையிலான பிளவு ஏற்கனவே பிரிந்து போயுள்ள சிங்களப் பொருளாதாரத்துள் ஏற்படும் தருணம் வரும் காலத்தில் உள்ளது.

### 5. பிராந்தியப் பொருளாதாரமும், இந்தியத் தலையீடும்

போராட்டங்கள் பற்றி பேசுபவர்களுள் பலர் இன்று பொருளாதாரம் பற்றி கவனம் செலுத்துவதும், குறிப்பாக உள்நாட்டுச் சர்ச்சைகள் (conflicts) இடம்பெறும் பிரதேசங்களை அந்நாட்டின் மற்றைய மாநிலப்-பிதேசங்களுடன் ஒப்பீடு செய்து நிலமைகளுக்கு புதிய வடிவங்கள் கொடுப்பதும் மிக்க வரவேற்க வேண்டிய வளர்ச்சிகள். இலங்கை விடயத்தில் இடைஞ்சல்கள் பலவாகினும், அவற்றிடையே, முத்துக்கிருஸ்னா சர்வானந்தன் (பருத்தித்துறை பொருளாதார நிறுவனம்) அவர்களால் அண்மையில் East-West Centre (Washington) நிறுவனத்தூடாக வழங்கிய கட்டுரை (Policy Studies 44) அருமையானது.

உழைப்பு என்பது ஒரு பொருளாதாரத்தின் அதிமுக்கிய அம்சமல்ல என்ற அடிப்படை கோட்பாடைக் கொண்ட பொருளியல் வாதக் கூடங்களிலிருந்து (school of thoughts) வருபவர்களே இன்று மக்களது பங்கென்றும் பயன் என்றும் அவர்களது கீழ்மட்ட சமூக, தனிமனித பலமாக்கம் (empowerment) என்றெல்லாம், வேறெதையாவதை நியாயப் படுத்துவதற்காகவேனும் கூறும் போது எமது சமூக-அரசியல் விளக்கங்கள் மீண்டும் பரிசீலனைக்கு உள்ளாகின்றன, மேம்படுகிறன. மக்களது உழைப்போ மூளைத் திறனோ இல்லாது மூலதனத்தை முன்கூட்டிச் செல்வதால் ஒரு பயனும் இல்லை என்பதை உலகமயப்படுத்தப்பட்ட சந்தை இன்று அறைகூவலாகவே அறிவிக்கின்றது என்பதே எமது விளக்கம். அதே தருணம், பிரிந்து இயங்குவதற்கும் பிரிவினை வாதங்களுக்கும் இடையேயான பாரிய வெளியும் தேசம், நாடு, இறைமை என்ற புதிய அகராதிகள் ஊடாக அங்கே பகிரங்கமாகின்றது.

எமது வாதமோ இன்னுமொருபடி மேலே சென்று இவர்கள் போன்றவரை நோக்கிய வேண்டுதலில் தங்கியது. 'உள்நாட்டு' ஒப்பீடுகள் உள்நாட்டு போர்களை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங்களை விளங்கிக் கொள்வதற்கு அவசியமானதொரு கருவிகள் என்பதை வரவேற்கிறோம். ஆனால், இலங்கைபோன்ற நாடுகளின் பிரச்சனை தம்முள்ளே கண்ட முரண்பாடுகளாயினும் அவற்றின் மூலங்கள், “தாம் பிராந்தியத்தில் எங்கே? ” என்ற தன்-நம்பிக்கையீனங்களாலும் உருவாகுபவை என்பது எமது கருத்து. இதனால், பிராந்திய ரீதியான பொருளாதார ஒப்பீடும் அவசியம் என்கிறோம். மேலும், காலனித்துவ காலத்தில் ஒன்றிணைக்கப்பட்டு நாடுகளாக புதிய வரைவுகளுடன் முன்வைக்கப்பட்ட பொருளாதாரங்கள் உலகமயப்படுத்தல் என்ற புதிய நியதிகளின் கீழ் பிராந்தியச் சூழலலுகளுள் ஒளிந்து கொண்டு தமது சிதைந்துபோகும் இறைமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வதையும், அத்தேவையை நாம் புரிந்து கொள்வதும் அவசியம் என்கிறோம்.

பொருளாதாரச் சந்தைகள் உலகமயமாக மாறத் தொடங்கிய காலம் பனிப் போரின் முடிவுக்காலமாக அமைந்ததில் வியப்பில்லை. அதே தருணத்தில் கணனியியற் புரட்சி இடம்பெற்றதும் இம்மாற்றங்களுடன் தற்செயலாக தொடர்புபடுத்தும் விடயமுமல்ல. பாரிய அளவில் மூலதனம் (capital) அரச கட்டுக்களை மீறி மாற்று நாடுகளைச் சென்றடைய முடியும் என்ற புதிய நிலை பொருளாதாரப் பலவான்களையே தளமிழக்க வைக்குமாயின் சிறிய பொருளாதாரங்களின் நிலை என்ன? அந்நாடுகளின் இறைமை என்பதன் பொருள் என்ன? என்பவை கேள்வியே.

பொருளாதாரத்தில் முன்னணி வகிக்கும் நாடுகள் இம்மாற்றங்களை முற்கூட்டியே ஊகித்து இருந்தமையால், புதிய பிராந்திய பொருளாதார உறவுகளை ஏற்படுத்தி அல்லது ஏற்கனவே இருந்தவற்றை மாற்றி அமைத்து தம்மை சுதாகரிக்க முயன்றன. இப்புதிய சூழலில் அரசுகள் என்பதன் முன்னைய வரைவுகளில் அமைந்த இறைமைகள் இனிமேலும் செல்லாதவை என்பதை அவை மறைமுகமாகவாயினும் ஏற்றுக்கொண்டதாக உள்ளன. சிறிய பொருளாதாரங்களைப் பொறுத்வரை இறைமை என்பது உள்நாட்டுப் பாதுகாப்பு என்ற விடயத்தை மட்டுமே குறிக்கும் பதம். அதாவது, பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளால் எழும் உள்நாட்டு சர்ச்சைகளை முகம் கொடுப்பதும், பாராமரிப்பதுமே இவற்றின் கருமம் என்றாகின்றன.

தென்ஆசியப் பிராந்தியத்தில் இம்மாற்றங்கள் இந்தியாவை புதிய பொருளாதாரப் பலவான் என்ற நிலைக்கு எய்தி உள்ளது. ஆரம்பத்தில் தனியாரால் கணனியியலூடாகத் தொடக்கப்பட்ட பொருளாதாரப் புரட்சி இன்று அதனை பல உயர்-தொழில்நுட்ப துறைகளில் முன்னணிக்கு இழுத்து வந்துள்ளது. இருபது வருடங்களின் முன்னர் இருபதினாயிரம் துருப்புகளுடன் இலங்கைத் தீவுக்குள் புகுந்து வெளியேறிய இந்தியா வேறு இன்றைய இந்தியா வேறு. இப்புதிய சூழலில் தென் ஆசியப் பிராந்தியத்தில் தனது பொருளாதார வளர்ச்சிக்கு இசைவாக இந்தியா தனது அரசியல்-வெளிவிவகார கொள்கைகளையும் மாற்றி அமைத்துக் கொள்வது எதிர்பார்க்கக் கூடியதே. தன்னுடைய வளர்ச்சி என்பதையே பிரதானக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இந்தியாவின் உற்பத்திகளின் விற்பனைக்கான பிரதான சந்தை அதனது பிராந்தியம் அல்ல. இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி சுமார் $1 கோடி-கோடி (trillion) என மிகவும் கம்மியாக அமரிக்க அரசால் கணிக்கப்பட்டுள்ளது (2007). அதனது ஏற்றுமதிகளுக்கு முதல் ஐந்து பிரதான நாடுகள் ஐ.அமரிக்கா (15.5%), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (9.7%), சீனா (6.5%), சிங்கப்பூர் (4.8%), பிருத்தானியா (4.5%) ஆகவும், 99 வது ஸ்தானத்தில் மத்திய அமரிக்க நாடான கொண்டூரஸ் (0.09%) உள்ளதையும், சிறீ லங்கா இவற்றிடையே இடம் பெறவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால், இறக்குமதிகள் என்ற சிறீ லங்காவின் பார்வையிலோ இந்தியா முதலிடம் வகிக்கிறது (20.7%). இவை பொதுவாக நில-எண்ணைப் (pertolium: oil, plastic pellets, etc), இரும்புப் (iorn, steel), பொருட்களாகவும் சிறிய இயந்திர வகைகளாகவும் உள்ளன. சிங்கப்பூர் (8.3%), கொங்-கொங் (7.3%), சீனா (7.1%), ஜப்பான் (5.9%),மற்றைய நான்கு ஸ்தானங்களையும் வகிக்கின்றன. சிறீ லங்காவின் ஏற்றுமதிகள் ஐ.அமரிக்கா (31.3%), பிருத்தானியா (12.4%), இந்தியா (9.2%), ஜேர்மனி (5.3%) என்ற நான்கு நாடுகளைச் சென்றடைகிறது. ஆனால், இந்தியாவுக்கான ஏற்றுமதிகள், குறிப்பாக செப்புத்-தாது, தேயிலை, உடுப்பு வகைகள், பாரிய விகிதத்தில் வளர்ந்துள்ளதாகவும் இந்தியா தற்போது மூன்றாவது ஸ்தானத்தை வகிப்பதாகவும் 2008 வாணிகத் தரவுகள் கூறுகின்றன. அதேவேளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதல் நூறில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறீ லங்கா இடம்பெறுவதில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். முதல் ஐந்து: சீனா (9.7%), ஐ.அமரிக்கா (6.1%), சுவிஸ்சலாந்து (4.9%), ஜேர்மனி (4.2%), அவுஸ்திரேலியா(3.9%), 99 வது ஸ்தானம் அமர்த்தி சமோவா (0.05%).

அது சரி, இந்தப் புள்ளி விபரங்கள்தான் இங்கு எதற்கு?
முதலாவதாக, இலங்கையின் ஏற்றுமதியிலும் இறக்குமதிலும் இந்தியா எவ்வளவுதான் பங்கு வகித்தாலும், இந்தியாவினது ஏற்றுமதியிலும் இறக்குமதியிலும் அவை கொண்டுரஸையோ, அமர்த்தி சமோவாவையோ தாண்டுவதில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அப்படியாயின், இருதரப்பு வியாபார ஒப்பந்தங்களும், ஒருதரப்பு முதலீடுகளும் அரசியல் இலாபம் தேடுவதற்கே என்ற எமது கருத்தை தரவுகளுடன் ஊர்ஜிதம் செய்ய முனைவது இரண்டாவது காரணம். இவற்றைவிட, இந்தியாவினது அயல் நாடுகளுடனான வாணிபம் சராசரி 110 % திற்கும் மேலாக வளர்ந்துள்ளமையும் அதனது வெளிவிவகாரக் கொள்கையில் உள்ள பாரிய மாற்றமும் நேரடித் தொடர்பு கொண்டவை என்பதை நாம் மூன்றாவது காரணமாகக் கொள்ள வேண்டும்.

இந்தியா சீனாப் போட்டிகள் பகைமையானவையா என்பது விவாதத்துக்குரியதே. இந்தியா தனது சுற்றாடலின் பொருளாதாரத்தின் பற்றாக்குறையால், தனது பொருளாதார வளர்ச்சிக்கு சோழ சாம்ராஜித்தைப்போல கிழக்கு நோக்கிப் புறப்பட்டதால் ஒரு புறத்தில் அங்கே சீன தேசத்தின் சந்தைக்கான போட்டியில் ஈடுபட வேண்டி உள்ளது உண்மைதான். ஆனால், சீனா-இந்தியா வர்த்தகம் இன்று இருநாடுகளுக்கும் முக்கியமானதாக, மூன்று அல்லது நான்காவது ஸ்தானத்தை வகிப்பதாகவும், அவ்வளர்ச்சியை அதிகரிப்பதற்கான நிலைமையுமே உள்ளது. எனவே, வெறுமனவே சந்தைக்கான போட்டி என்று கூறிவிடுவது பொருத்தமற்றது, எவ்வகையான சந்தைக்கான போட்டி என வினவுவதே சரியானது. மேலும், SAAC இனனமும்தான் ஒரு பொருளாதார ஒருங்கிணைப்பாக முடியாதுள்ளமையால் இந்த மக்கள் பரந்த பிரதேசத்தை மேவி அவர்களின் பொருளாதாரத்தை வளர்த்திடும் போக்கே இவ்விரு நாடுகளுக்கும் உள்ளது.

இந்தியா, புரைந்து போன (failed) நாடுகளால் சூழப்பட்டுள்ளதையும், இதற்கு எதிர்மாறான நிலைமையை சீனா அநுபவிக்கின்றது என்பதையும் எமது SAAG அமைப்புக்கான ஆய்வுக் கட்டுரை ஒன்றினில் சுட்டிக் காட்டி இரு பிராந்தியப் பலவான்களையும் ஒப்பீடு செய்திருந்தோம். இவற்றின் இரு விளைவுகளாக இந்தியா தனது சுற்றாடலின் வளர்ச்சியிலேயே தனது பாதுகாப்பினைத் தேடி நிற்கும் எனவும், நேரடி இராணுவத் தலையீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவே முயலும் என்றும் தரவுகளுடன் கூறியிருந்தோம். இந்தியாவின் ஏற்றுமதிப் பொருட்களில் உயர்தகமை கொண்டவற்றை கொள்வனவு செய்து நுகரும் நிலையில் இந்தியாவைச் சுற்றிய நாடுகள் எவையும் இல்லை என்பது எமது அவதானிப்பு. ஆகவே, தனது சுற்றாடலை சந்தையெனக் கருதிக் காரியமாற்ற வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இல்லை.

ஆனால், இந்தியா என்பது உலகத்தின் பெரியதொரு சந்தை, குறிப்பாகக் கூறினால் மத்திய வர்க்கச் சந்தை. எனவே, அதற்கான போட்டியில் உள்நாட்டு முதலாளித்துவம் வெளியாரது முதலாளித்துவத்துடன், குறிப்பாக ஏகாதிபத்தியவாத முதலாளித்துவத்துடன் நேரடி போட்டியில் ஈடுபடவேண்டி உள்ளமையும், அதற்காக அச்சந்தையின் எல்லைகளை அறுக்கைப் படுத்த வேண்டி உள்ளமையும் அவதானிக்கக் கூடியவை. சந்தை உலகமயப்படுத்தப்பட முன்னர் தனது உள்நாட்டு பொருளாதார வர்த்தகச் சட்டங்களால் வெளியார் முதலாளித்துவத்துக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலை நாடுகளுக்கு பொதுவாக இருந்தது. இன்றோ அந்நிலைமாறி (1) பின்புல எல்லைகளை அறுக்கைப்படுத்துவதால் அல்லது (2) எல்லைகள் என்பதை கடவுச் சீட்டுகள் தேவையற்ற எல்லை-வரிகள் இல்லாத நிலைமையை இருதரப்பு ஒப்பந்தங்களால் ஏற்படுத்தி அல்லது (3) கூட்டமைப்புகளை உருவாக்கி தமது சந்தையை காப்பாற்றிடவும் விஸ்தரித்திடவும் வேண்டிய தேவை நாடுகளுக்கு உள்ளது.
இதனை எந்த நாடுகளும் செய்திடும் நிலையில் இல்லை என்பது தெட்டத் தெளிவு. பிராந்தியப் பலவான்களின் தலைமையிலேயே இவை நடைபெறக் கூடிய விடயம் என்பதும் தெளிவு. இவ்வகையில் இந்தியா தனது ஆழுமையின் வீச்சினை தனது எல்லகைளுக்கு அப்பால் தள்ள முயற்சிப்பது எதிர்பார்க்க வேண்டியதே. மேலும், இலங்கை பல இயற்கை வளங்களைக கொண்ட தீவாகினும் அவற்றை அள்ளிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு போகக் கூடிய வகையில் அவ்வளங்கள் எவையும் இல்லை என்பதையும் நாம் அறிவோம். இந்தியாவுக்கோ இன்று உடனடித் தேவையாக பொன்னாகத் தெரிவது தனது வளர்ச்சிக்குத் தேவையான எண்ணையும் நில-வாய்வுமே அன்றி வேறெதுவுமல்ல. இலங்கையில், வதந்திகளும் கட்டுக் கதைகளும் எவ்வளவாகினும் கையில் பெறக்கூடிய எண்ணை வாய்ப்போ இன்னமும்தான் கிட்டியதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்தியரது இலங்கை குறித்தான தலையீடு நேரடிப் பொருளாதார இலாபத்தை நோக்கியதல்ல என்பது எமது கணிப்பு. பெருந் தோட்டங்கள், பண்ணைகள், எரிபொருள் துறைகளில் இந்திய மூலதனம் ஈடுபடுவதன் முதலாவது உள்நோக்கம் இலங்கைச் சந்தையுள் மாற்றார் நுழைந்து அதனைப் பின்புலமாகப் பாவித்து தனது பாரிய உள்நாட்டுச் சந்தையை யாரும் இலகுவில் எய்திடவிடாது தடுப்பதற்கே ஆகும். ஐரோப்பியப் பொதுச் சந்தையின் வழக்குகள் கட்டமைப்புகள் அறுக்கை செய்யப்பட்டு விஸ்தரிப்பு ஏற்பட முன்னரே Trojan Horse போல ஜப்பானியர் பொருளாதார ரீதியில் பிருத்தானியாவுள் புகுந்து கொண்டதை நாம் இங்கு நினைவு கூரலாம். இரண்டாவது, தனது பொருளாதார ஊடுருவலூடாக இலங்கை அரசியலில் தனது கையை வலுப்படுத்த பொருளாதரமும் உதவும் என்பது அதனது எதிர்பார்ப்பு. ஆகவே, இவ்வகையிலான மூலதன விஸ்தரிப்பை இந்தியா தனியார் ஸ்தாபனங்கள் ஊடாக முன்னெடுப்பதும் சமயங்களில் இராணுவ பலத்தால் சமிகை காட்டுவதும் புரிந்து கொள்ளக்கூடியதே.
இவ்வழியில் அது எமது போராட்டம் பற்றியும் தனது கருத்துக்களை இந்தியா நிச்சயப்படுத்த முனைவதில் வியப்பல்ல.

## 6. அரசியற் குறிப்புகள்

மேற்படி தரப்பட்டுள்ள தரவுகள், தகவல்கள், வாதங்கள், நிரூபணமாகும் கருத்துகள் என மேலும் நாம் பெற்றுக் கொள்ளும் அறிவுடன் பின்வரும் அரசியற் குறிப்புகள் அமைகின்றன.

(1) பிருத்தானிய காலனித்துவ காலத்தின் பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் பொருளாதார ரீதியில் பின்னோக்கித் தள்ளப்பட்டு உள்ளனர்.

இதற்கு இலங்கைச் சுதந்திரத்தின் பின்னர் அரசைக் கைப்பற்றிய சிங்கள சோவனவாதிகளின் அரசியற்-பொருளாதாரக் கோட்பாடுகள் முற்காரணம்.

இவ்வாறான பொருளாதாரத் திட்டங்கள் சிங்கள மக்களது அபிலாசைகள் என்ற மையவாதத்தில் எழுந்தவை. ஆதலால், அவற்றை மட்டுமே பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலான தவறான சமூக-பொருளாதார முதலீடுகள் நடைமுறைக்கு ஆக்கப்பட்டன.
மேலும், வடக்கு கிழக்கு என்ற பகுதிகள் அரசியற்-பொருளாதரத்தில் இரண்டாம் தரமானதாகக் கருதப்பட்டன. அதேவேளை, சிங்களக் குடியேற்றங்களினூடாக சிங்கள அரசியல் நெருக்கடிகளைப் போக்கிடும் வடிகால்களாகவும் வடக்கும் குறிப்பாகக் கிழக்கும் கணிக்கப்பட்டதுடன், அங்கு ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் பேரினவாதத்தினை கொண்டு செல்லும் சித்தாந்த வாகனமாகவும் கருதப்பட்டன.

வடக்கு கிழக்கின் அரசியற்-பொருளாதார பின்தங்கலுக்கு இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் ஏறத்தாழ அரைவாசிக் காலமாக இடம்பெறும் இனப்போர் (civil war) இரண்டாம் காரணமாகும்.

இனப்போர் என்பது இராணுவ ரீதியால் மட்டும் ஏற்படுத்தப்படும் விடயமல்ல. காலா காலமாக அரசியல் பொருளாதார ரீதியில் அரச அமைப்பின் பாராளுமன்றம், சிங்களப் பெரும்பான்மையின் வாக்கு, அவர்களது வன்முறைப் பலம், அரசியற் கலாச்சாரம், நிர்வாகத்துறை, போன்ற சகல கருவிகளையும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராகப் பாவித்தமையே உண்மையான இனப் போரின் அடிப்படையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்களப் பேரினத்தின் பலத்தை பேரின-வாதமாக திசைதிருப்பி சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சித்தாந்தமும் ஆக்கி, முதலில் இஸ்லாமியருக்கும் கொழும்பு செட்டியருக்கும், பின்னர் கிழக்கில் இஸ்லாமியருக்கும் அவற்றினைத் தொடர்ந்து தமிழர் சமூகங்களுக்கும் எதிராக தேர்ந்தெடுக்கப்படும் காலங்களில் அரசியற் தலைவர்களால் முன்நின்று நடாத்தப்படும் இனக் கலவரங்கள் மேற்படி நாம் கூறிய இனப்போரின் இன்னுமொரு பரிணாமத்தை உணர்த்துவன.

இவை அனைத்தின் கூட்டுத் தொகுப்பின் இறுதிக் கட்டமே இராணுவப் போராகும்.

இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது சுதந்திரத்தின் பின் கையேற்கப்பட்ட காலனித்துவ பொருளாதாரமும் அதனை அடிப்படையில் மாற்றி அமைத்திட முடியாத எமது நிலையுமாகும்.

மக்களது பொருளாதாரத்தை போராட்டத்திலிருந்து பிறிதுபடுத்தி போராட்டத் திட்டம் அமைத்ததுடன், அவர்களது சுருங்கி வரும் பொருளாதரத்தில் இன்னுமொரு ।॥ෆ වரி விதித்து அ፣ிவிருத்திக்கான ஊக்குவி॥ |கள் யாவற்றையும் நசித்தொழித்தமை மேலதிக காரணம்.

(2) மலையகத் தமிழர்கள் சகல அரசியற்-பொருளாதார நிலமைகளிலும் பின்தள்ளப் பட்டுள்ளனர்.

இவர்களது நிலைமையை பல தடவைகள் பல விதமாக நாம் கூறியுள்ளோம். கடந்த ஆண்டு Comrade Ratna Memorial Conference (ஈரோஸ் அமைப்பின் கருவும் ஸ்தாபகருமான தோழர். இளையதம்பி இரத்தினசபாபதி) நினைவுசார்த்த நிகழ்வின் போது பேராசிரியர் சின்னத்தம்பி சமர்ப்பித்த கட்டுரை புள்ளி விபரங்களுடன் இன்றைய அவரது நிலைமையை சாமர்தியமாகச் சொல்லும். இலங்கைச் சுதந்திரத்தின் முன்னரும் சிங்களப் பேரின வாதிகளது அரசுக் கைப்பற்றலின் பின்னரும் ஏற்பட்ட நிமைகளை எம்மிலும் பார்க்க காதரின் “இருபதாம் நூற்றாண்டின் அடிமைத்தனம்” சிறப்பாகச் சித்தரிக்கும்.
6.5 % வளர்ச்சியை சிறீ லங்கா அடைந்துள்ளது எனப் பெருமையாகக் கூறும் அரசாங்கமோ மலையகத் தமிழர்களது வறுமை 55 % வளர்ந்துள்ளது என்பததை எப்படி நிராகரிக்க முடியும்? அவர்கள் தமிழ் பேசுபவராக இருப்பது தற்செயலான விடயமா? இவர்கள் தொழிலாளிகளாகவும் நாட்டுப் புறவாசிகளாக இருப்பதும் தூரதிஸ்டமாக இடம்பெற்ற விடயங்களா?
அண்மையில் இடம் பெற்ற APRC ஆலோசனைச் சுற்றில் மலையகத் தமிழருக்கும் ஒரு அரசியல் அலகு வேண்டும் என்று அங்கீகரிக்கப்பட்டமை இவர்களது அரசியல் முன்னோட்டத்தின் ஒரு வழிக்கல் ஆகிறது.
இருந்தும் தமிழ் பேசும் இலங்கைச் சமூதாயங்களுள் பாட்டாளிகள் எனக் கொள்ளக் கூடியவரது அடிமைத் தனம் சிங்கள-பௌத்த சோவனசித்தின் வர்க்கவாதக் சித்தாந்தக் கரத்தையும் அவர்கள் தமிழராக ஒடுக்கப்படுவது அதன் இனவாதக் கரத்தையும் சுட்டிக் காட்டுவனவாகும் என்பதைத் திரும்பத் திரும்ப எடுத்துக்காட்ட நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

(3) இஸ்லாமியத் தமிழ் பேசும் சமூகங்கள் இலங்கையித் தீவிலும் தாம் வாழும் சூழல்களிலும் தமது நிலை கொள்ளலுக்காக போராட வேண்டியவராக உள்ளனர்.

இதற்கு சிங்கள அரசுக்கு எதிராக தமிழர்கள் நடத்தும் போரிலிருந்து தமிழ் பேசும் இஸ்லாமியர் அந்நியப் பட்டுள்ளமை ஒரு காரணம்.

இங்கே, இஸ்லாமியச் சமூகங்களது உடமைகள் உரிமைகள் குறித்து தமிழீழக் கோரிக்கை, தமிழ் தேசியவாதம் என்பவற்றிடையேயான உள்முரண்களை நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம்.

www.tamilarangam.net

மேலும் இஸ்லாமிய சமூகங்களுக்கும் தமிழர் சமூகங்களுக்கும் இடையே வர்க்க ரீதியான உடமைப் பிரச்சனை, குறிப்பாக மட்டக்களப்பினையும் அதன் கீழுள்ள பிரதேசங்களில் உள்ள காணிச் சர்ச்சை தூபம் போடுவதாகும்.

இவ்வாறு வர்க்க ரீதியில் அமைந்த சர்ச்சைகள் நிமிர்த்தம் பல தமிழரது போராட்ட அமைப்புகள் ஒரு கரையிலும் இஸ்லாமிய பாதுகாப்புக் குழுக்கள் மறுபுறத்திலும் கிழக்கிலே காலாகாலமாக நடத்திவரும் படுகொலைகள் நெருப்பில் நெய்விடும் காரியங்களாகும்.

இவற்றிக்கெல்லாம் சித்தாந்த விளக்கம் தருவதற்காக நடத்தி வைத்தது போல அமைந்தது வடக்கில் விடுதலைப் புலிகள் ஒப்பேற்றிய இஸ்லாமியரது இனஅகற்றல் (ethnic cleansing). இத் தவறுக்காக அண்மையில் புலிகள் மன்னிப்புக் கேட்டு மாற்றீடு செய்திட முயன்ற போதிலும் தனிமனிதர்களில் தைத்த வடுக்கள் சமூக் காயங்களாக மாறிவிட்டதையும் அவை இலகுவில் ஆறப் போவதில்லை என்பதும் சரித்திர நியதி.

தமிழ் பேசும் இஸ்லாமியரும் சிங்களம் பேசும் இஸ்லாமியரும் கூட்டாக, புதிய இனமாக, இஸ்லாமியராக மட்டுமே பரிணமித்தமைக்கு பலவிதமான காரணிகளும் கால கட்டங்களும் முன்வைக்கப் படுகின்றன. அவர்களது மொழி தமிழ் அல்ல என்ற வாதங்ளை புதிதாக உருவாக்கப்படும் வேளையுமிது. ஆனால் புலிகளின் கொடுமையே கருவாக்கம் என்பது இஸ்லாமிய சித்தாந்தவாதிகளது எழுத்துக்களிலிருந்து நாம் பெற்ற அறிவு.

இந்தப் புதிய இனத்துள் தமிழ் பேசியபடி வடக்கு கிழக்கில் வாழ்பவர்களும், ஏற்கனவே தம்மை முஸ்லீம்கள், சோனகர்கள் என்று இன்ன பிற அடையாளங்களே போதுமென இருப்பவர்களும் என்னதான் அவ்வப்போது கூறினாலும் (1) நாம் அனைவரும் மனுமரபில் (genetical) ஒரே குடும்பத்தவர் என்பதையும் (2) எமக்கெல்லோருக்கும் ஒரே வகையில் உணரப்பட்ட உடமைகளும் (3) அவை சார்ந்த உரிமைகளும் வடக்கிலும் கிழக்கிலும் உண்டு என்பதையும் மறுக்க முடியாது.
ஒரு சிறு குறிப்பு: இந்திய உபகண்டத்தில் பாக்கிஸ்தானை அண்டிய பிரதேசத்தைவிட கீழ் பாகத்தில் வாழ்பவர்கள் யாவரும் ஒரே மனுமரபைக் கொண்டவர்கள் என்பதும், மேலும் பரந்த இந்தோ-ஐரோப்பிய (Cacausian / Indo-European) குடும்பத்துள் M –Chromosome என்பதை மட்டுமே வித்தியாசமானதாகக் கொண்டுள்ளார்கள் என்பதும் விஞ்ஞான ஆய்வுகளாலான தரவுகள்.

தமிழர் - இஸ்லாமியர் என்னும் பிரிவு, அல்லது அந்நியப்பாடு அபிலாசைகள் குறித்ததன் நிமித்தமே என ஆதாரமற்று கூறுபவர் பலர் உள்ளனர். அதைவிட காலாச்சார, அதாவது மத ரீதியாக எழுந்துள்ள அந்நியப்பாடே காரணம் என்போரும் உண்டு.
மக்கள் கூட்டங்கள் ஒரு அடையாளத்தை முன்நிறுத்தும் போது அதனது முன்னணி வர்க்கம் என்ன என்பது எமது முதற் கேள்வியாகிறது. மேலும், இவ்வடையாளங்கள் நாம் மற்றவரால் ஒடுக்கப்படுகிறோம் அல்லது மற்றவரிலும் பார்க்க நாம் பின் தங்கிவிட்டோம் என்பவற்றின் அடிப்படையில் மட்டும் முன்வைக்கப்படுவதல்ல. மாறாக, தாம் மற்றவரிலும் பார்க்க சமூக-பொருளாதார வளர்ச்சியில் முன்சென்று விட வேண்டும் அல்லது தமது முன்நிலையை பேணிக் காத்திட வேண்டும் என்ற காரணங்களாலும் முன்னிறுத்தப்படுகின்றன.

தமிழர், தமிழீழம் என்ற அடையாளங்களை முன்நிறுத்தியவர்கள் தரப்படுத்தலை இன ஒடுக்கலுக்கான ஒரு உதாரணமாக முன்வைக்கும்போது தமது முன்நிலையைப் பேணிட வேண்டும் என்ற யாழ்ப்பாண மனநிலையை அது தொட்டுக் காட்டுகிறது. அதேவேளை பெரும்பான்மையான தமிழ் பேசும் சமூகங்கள் தரப்படுத்தலால் நயம் பெறுகிறார்கள் என்பதை புரிந்தும் ஏற்றுகொள்ள முடியாத நிலைப்பாடு வர்க்க நலன்களுக்கும் மக்கள்-அடையாளங்களுக்கும் இடையிலான உறவையும் எடுத்துக்காட்டுகிறது.

இது போன்றே சரித்திரம் காட்டும் சமூக அநுபவங்களின் அடிப்படையிலேயே யாராவது எந்தவொரு மக்கள் கூட்டத்தையும் பிரித்துப் புது அடையாளம் தர விளையும்போது, அப்பிரிவிலால் ஏற்படும் நலன்கள் எந்த வர்க்கங்களைக் குறித்து நிற்கிறது என்ற கேள்வி எமக்கு அவசியம் என்கிறோம்.
காணிப் பிரச்சனைகளில் உருவான, குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் பகுதிகளில் இடம் பெறும் வர்க்க ரீதியான குரோதங்கள் முரண்பாடுகள் மத-கலாச்சார ரீதியான பகை-முரண்பாடுகளாக முன்நிறுத்தப்படுவது தவறு என்று திடமாக நாம் கூறும்போதிலும் அவற்றின் அடியில் இருப்புக் கொண்டுள்ள மன ஓட்டங்கள் புரிந்து கொள்ளக் கூடியவை என்பதையும் ஒத்துக் கொள்கின்றோம்.
காணி நிலமற்ற சமுதாயங்கள் பல கிழக்கில் இருந்தாபோதும், அவர்களுள் சிலர் தம்மை இஸ்லாமிய மக்களாக இனம் காட்டுவதால் சமூகவளர்ச்சி கண்டிடலாம் என்ற மத்திய வர்க்கத்தினரது ஆக்ரோஷ வெற்று வார்த்தைகளில் நம்பகம் கொள்வது இயற்கையே.
ஆனால் நாம் சொல்லும் விளக்கம் இவர்களில் யாருக்காவது காணி வாங்கித் தந்திடுமா என்ன? என வினவுவதும் நியாயமே. இந்தியாவின் பிகார் மாநிலத்தில் உயர்சாதி இந்துக்கள் நிலப் பிரபுத்துவர்களாக இருப்பதும் காணி நிலமற்ற தாழ்ந்த சாதி இந்துக்கள் உரிமை உடமை கோரும்போது முழுக் குடும்பங்களையே வெட்டி உயிருடன் எரித்துக் கொல்வதையும்தான் நாம் அறிவோம். வர்க்க நலன்களுக்கு மத, இன அடையாளங்கள் தடையாக அமைவதில்லை என்பதையின்றி வேறெதனை இது காட்டுகின்றது?
ஈராக்கில் இன்று சுன்னா-ஷியா என்ற இஸ்லாமிய உள்-மதப் போரையும் தாண்டி இடம் பெறுவது ஷியா-ஷியா போராகும். இவர்கள் ஷியாக்களாக இருந்தும் ஒருவரை ஒருவர் கொல்லுவது வர்க்க நலன்களாலேயன்றி வேறல்ல. இவ் அறிவினைப் பகிர்ந்திடுவதால் இலங்கையில் தம்மை இஸ்லாமியர் என அடையாளம் காணவிளையும் குடியானவர்கள் தமது நிலைப்பாட்டை உடனடியாக மாற்றிடப் போவதில்லை, அல்லது இவ்வடையாளங்களை மற்றோர் மீது நிரப்பந்தித்து அதிக இலாபம் பெறவிளையும் வர்க்கங்கள் தம் முயற்சியை கைவிடப் போவதுமில்லை.
மக்களது அடி ஒட்டிய வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்போது, அவர்களது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அடியிலும் இஸ்திரம் ஏற்படும்போது, அவர்களது தனிச்சொத்தும் சமூகச் சொத்தும் வல்லாரின் கொள்வனவுச் சக்தியுடன் ஈடுகொடுக்கக் கூடியதாக மேம்படும்போது அவற்றிக்காக நாம் கதைப்பது எழுதுவது மட்டுமின்றி காரியமும் ஆற்றும்போதே, கூறுபோடும் சித்தாந்தங்களை விட்டு மனிதர்கள் நிரந்தரமாக அகல்வார்கள்.

4. சிங்களச் சமூகங்கள்

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் சிங்களச் சமூகங்களை நேரடியாகப் தாக்காது போகினும் அவர்களது பொருளாதாரத்தினூடாக தாக்கங்களை விளைவித்துள்ளது.

இக்காலகட்டத்தில் சர்வ தேசியத்தில் ஏற்பட்டுள்ள (1) கேந்திர (2) பொருளாதார மாற்றங்கள் பாரிய மாற்றங்களை உருவாக்கி உள்ளன.

தமிழீழப் போர், ஜே.வி.பி அமைப்பின் கிளர்ச்சி, அரசின் இராணுவ ஒடுக்கு முறைகள், அண்மையில் இஸ்லாமிய இராணுவக் குழுக்கள் யாவும் இலங்கைத் தீவின் அரசியலில் வன்முறை, இராணுவ அணிகள், பயங்கரவாதம் எனும் அங்கங்களை ஒவ்வொரு அடுக்குகளிலும் பிரிக்க முடியாதவாறு இணைத்துள்ளன.

இவற்றின் தனிமனித-பயங்கரவாத நடவடிக்கைகளால் சகல சமூகங்களும் அரசியற் தலைமை இழந்தவை ஆக்கப்பட்டுள்ளன. அரசியற் கட்சிகளின் தலைவர்கள், தலைமைப் பீடங்கள் அழித் தொழிக்கப் பட்டுள்ளதுடன், சமூக கிராமத் தலைவர்கள் முன்னணி நபர்கள், ஊடகத் தொழிலாளிகள் கூட கொடூரமாகக் கொல்லப்பட்டு அல்லது தாக்கப்பட்டு அரசியல் அப்புறப்படுததல் செய்யப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

இவ்வாறான நடவடிக்கைகளால் சர்வசாதாரணமான கருத்துப் பரிமாற்றம்கூட இடம்பெற அனுமதி கிடையாது என்ற சூழுலும், தனிமனிதருக்கும் குடுபங்களுக்கும், சிறு சமூகங்களுக்குமே உயிருக்கு ஆபத்து நிலவரமே காற்றிலும் சுவாசத்திலும் இருப்பதால் அடிப்படையான சனசமூகக் கட்டுகளே (civil society) அற்றுப்போன நிலையே இலங்கை பூராகவும் உள்ளது.

இலங்கைச் சமூகங்கள் இன்றும் இனரீதியான அரசியல், பொருளாதார, கலாச்சார பிரிவுகொண்ட தமது வாழ்க்கையை நடாத்துகின்றன. சிங்களக் குடியானவர்கள் சரி, தொழிலாளிகள் சரி தமிழ் பேசுவோரை வெளியாராகவும், உடமைகள் அற்ற குடியேறிகளாகவும் கண்டுகொள்வதுடன் இலங்கைத் தீவு பூரணமாகத் தமது சொத்து என்ற பௌத்த-சிங்கள பேரினவாதத்தின் படிப்பித்தலின் வீச்சினுள்ளேயே உள்ளார்கள்.
இருந்தும் தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் இலங்கைத் தீவிலிருந்து அப்புறப்படுத்தப்படுத்த முடியாது என்ற இணக்கமான மனோநிலையை இவர்களில் பெரும்பான்மையோர் அடைந்துள்ளார்கள்.
தமிழ் பேசும் சமூகங்கள் தமிழீழப் போரில் முற்றாக ஈடுபடாதவர்களாக இருக்கும் போதிலும் அதேவேளை, அதன் முற்றான தோல்வி தமது சமூகங்களின் இருப்புக்கான தோல்வி என்ற மனோநிலையுள்ளும் உள்ளனர்.

சிங்களச் சமூகங்களுள் இந்தியாவையும் இலங்கைத் தமிழரது போராட்டத்தையும் நேரடியாக இணைத்து பார்க்கும் சமூக-மனோநிலைப்பாடு சக்தி இழந்துவருகிறது. அதேவேளை, இந்தியாவினது பொருளாதார பலத்தை புதிய பகைமைச் சக்தியாக பிரதிபலித்திடும் போக்கு சிங்கள-சோவனச சக்திகளாலும் தமிழீழத் தேசியவாதிகளில் ஒரு சாராலும் உருவாக்கப்படுகிறது.

**சான்றுகள்**

தகுந்த சான்றுகள் தரவுகள் இல்லாது கருத்துகளை உருவாக்கம் செய்வது விஞ்ஞான முறைக்கு அப்பாற்பட்டது. அவையோ தகமையாக இருக்க வேண்டின் இலகுவாகக் கிடைப்பனவுமல்ல. இந்த மிகவும் சிரமமான காரியத்தை செய்துள்ள சகலருக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.


- Sri Lanka, Poverty Assessment, January 2007
  {உலக வங்கி அறிக்கைகள் வறுமைபற்றிய கணக்கீடுகள்}
- Sri Lanka: Ploitical and Economic Update, February 2008
  {ஆசிய அபிவிருத்தி வங்கி: சிறீ லங்காவின் அரசியல் பொருளாதார நிலைமை}
- Central Bank of Sri Lanka Reports 1999 – 2008
  {சிறீ லங்கா மத்திய வங்கி அறிக்கைகள்}
- Economy of the Conflict Region in Sri Lanka, Muttukrishna Sarvananthan, East-West Centre, Washington, 2007
  {வடக்கு கிழக்கு பொருளாதார நிலைமைகள்பற்றிய}
- Strengthening the Provincial Council system, Centre for Policy Alternatives (CPA), May 2008 {மாகாணசபை முறையை பலமாக்குதல் பற்றிய கலந்தாலோசனை}
- Reserve Bank of India Reports, 1999 – 2008
- ஈழவர் இடர் தீர, தோழர். இ. இரத்தினசபாபதி, Eelam Research Organisations (EROS), September 1984.